UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

2012 பெப்ரவரி
அணி 08 படை 04
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது




இடைநிலை பாடசாலை
அபிவிருத்தியெனும்
மஹிந்தரின்
மாய மான் சிந்தனை!

பக்கம் 3

டிவொலூசனா?
ரிவொலூசனா?



பக்கம் 4




பக்கம் 5

பல வெற்றிகளை
பெற்றுத்தந்த
ஜே.வி.பி தலைவரின்
சுவீடன் பயணம்..!



பக்கம் 9



சிறகடிக்கும்
சிட்டுக்குருவியே
சிறகிருப்பதாலோ
சிறகடிக்கிறாய்
சுதந்திரம்
என எண்ணி

தேசம்
சுதந்திரம் எனும்
மாய வேலியால்
இறுக்கப்பட்டுள்ளது.
அடிமைத்தளையுடன்
இணைத்து

உடைக்கலாம் வேலியை
உனக்குப் பின்னால்
உள்ள படையும்
சிறையுடைக்கும்
சிற்றுளிகளே
சுதந்திர தேசத்துக்காய்
நன்றாக சிறகடி...!

# சட்டமூலமாக்கப்பட்ட EPF நிதிக்கொள்ளை!

ராஜபக்ஷ அரசாங்கம் ஜனவாரி18ம் திகதி ஊழியர்சேமலாபநிதி திருத்தச்சட்டமூலத்தை பாராளுமன்றபத்தில் நிறைவேற்றியுள்ளது ஊழியர் சேமலாப நிதியை பராமரிப்பதக்கு அதன் பிராதான அலுவலகமாக அமைக்கப்பட்டுவரும் கட்டிடத்திற்கு அந்நிதியில் ஒரு தொகையை பெற்றுக்கொள்வது தமது நோக்கமாக கூறப்படுகிறது. தற்போது இந்த நிதியை பராமரிக்கப்படும் அலுவலகம் வாடகைக்கு பெற்றுள்ளதால் அதற்கு நிரந்தரமான கட்டிடமொன்று தேவை என்பது மேலோட்டமாக பார்க்கும்போது நியாயமாகவே தென்படும். ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்தில் கபடத்தனம் நிறைந்திருக்கிறதென்பதை அவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும்போது தெரியவருகிறது.

நிறைவேற்றப்பட்டுள்ள ஊழியர் சேமலாப சட்டத்தில் குறிக்கப்படுவதாவது ஊழியர் சேமலாப நிதிய நிதிக்காக அமைக்கப்படும் கட்டிடத்திற்கு நிதியத்தில் இருந்து ஒரு தொகை பணம் ஒதுக்கப்படுகிறதாம் இந்த பணத்திற்கு உரிய வரையறை இருக்க வேண்டுமென பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்தினை அரசாங்கம் நிராகரித்தது. அதற்கிணங்க இப்போது அரசங்கத்திற்கு தேவையான அளவு பணத்தை இந்த நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

அரசாங்கம் தற்போது, ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) த்திற்கு கட்டிடத்தை அமைப்பதற்கல்ல. அதை சாட்டாக்கி ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணத்தை சூறையாடுவதற்கேயாகும். இந்த நிதியத்திற்காக 30 மாடிகளை கொண்ட கட்டிடத்தை கட்டுவதற்கான செலவில் 50% ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை பாவிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றியிருப்பது,மேற்கூறிய பணத்தை நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவே. ஊழியர்களின் உரிமையை இந்த நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சூரையாடுவதற்கே.

தரவுகளுக்கு ஏற்ப ஊழியர் நமபிக்கை நிதியத்தில் உள்ள மொத்த தொகை 11,000 கோடி ரூபாய்களாகும் .ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய மொத்த தொகை ஒரு டிரில்லின் ரூபாயாகும். அதாவது ஒரு லட்சம் கோடி ரூபாய். அரசாங்கம் பொய்யான காரணத்தைக்காட்டி சூறையாடப்போவது EPF நிதியையாகும். இதற்கு முன்னர் அரசாங்கத்தால் முன்வைத்து ஊழியர்களின் எதிர்ப்பினால் வாபஸ்பெறப்பட்ட தனியார் துறைக்கான ஓய்வூதிய சட்டமூலத்தை கொண்டுவர எத்தனித்ததும் இந்தப்பணத்தை சூறையாடுவதற்கே. அரசாங்கம் இப்போது கொள்ளையடிக்கப்பபோவது 65 இலட்சம் தனியார்துறை ஊழியர்களின் பணத்தை யாகும்.

இப்போது அரசாங்கம் இந்த நிதியத்தில் உள்ள பணத்தை பல்வேறு துறைகளில் முதலீடு செய்து பங்குச் சந்தையில் போட்டு அதனை வீண் விரயம் செய்து வருகிறது. அதற்கு மேலதிகமாக அரசாங்கம் இந்த நிதியத்தில் பெரும் தொகை கடனையும் பெற்றுள்ளது. கடந்த காலத்தில ஊழியர் சேமலாப நிதியத்தில் 26,900 மில்லியன் ரூபாவை பங்குச்சந்தையில் முதலீடு செய்துள்ளது. அதன்போது லாப் மற்றும் கிரேன் எளிவேட்டர்ஸ் கம்பனியின் பங்கினை பெற்றதனால் ஏற்பட்ட நட்டம் 11000 மில்லியன் ரூபாய்களாகும். ஊழியர்களின் பணத்தை சூறையாடி சூதாட்டம் ஆடிவருகிறது. இதற்கு புறம்பாக இந்த நிதியத்திலிருந்து 689 மில்லியன் ரூபாய் இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்திற்கு முதலீடு செய்துள்ள அரசாங்கம் திரைசேரி முறையின் மூலமாக இந்த நிதியத்தில் 90% கடனாகப்பெற்றுள்ளது.

இலங்கையின் முதலாளித்துவ முறையினுள் ராஜபக்ஷ அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. போலி அபிவிருத்திகள் வெறும் “கனவுகளாக” மாறியுள்ளதுடன் உண்மையில் உற்பத்தி துறையின் வீழ்ச்சியின் காரணமாக நாடு கடன், வரி, அபராதம் விதித்தல் போன்ற வற்றிலேயே தங்கியுள்து. வரவு செலவு அறிக்கை திரைசேரி புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளப்போதிலும் உண்மையில் சொத்துக்கள் எதுவும் கிடையாது. பங்குச்சந்தையின் கணக்குகளும் போலியானவையாகும். பாரிய நிதி நெருக்கடியைச்சந்தித்துள்ள அரசாங்கம்

10ம் பக்கத் தொடர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பநல சுகாதார ஊழியர்களின் போராட்டம்



குடும்பநல சுகாதார சேவையில் தற்போது பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளது. அதன் காரணமாக குடும்ப சுகாதார ஊழியர்கள் தமது பணியை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளர். இந்த நிலைமைகளின் காரணமாக தமது தொழிலுக்கு உரிய 11 கோரிக்கைகளை முன்வைத்து ஜனவரி மாதம் 25ம் திகதி நாடு முழுவதிலும் உள்ள ஊழியர்களின் ஒத்துழைப்போடு கொழும்பில் பாரிய ஆர்பாட்டமொன்று நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அகில இலங்கை சுவசேவைகள் சங்கத்தினால் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்த இந்த ஆர்பாட்டம் மற்றும் பாதயாத்தியையாக சுகாதார அமைச்சுக்கு சென்று தாங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை சுகாதார அமைச்சரிடம் கையளித்தாக அச் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் காமினி குமாரசிங்க தெரிவித்தார்.

## பணம் செலுத்தும் வார்ட்டுகள் இலவச சுகதாரத்தை புதைக்கும் செயல்

— அகில இலங்கை சுவசேவைகள் சங்கம்

வைத்திச்சாலையில் பெற்றுக் கொடுக்கவேண்டிய சுகாதார உபகரணங்கள் பலவற்றை அரச வைத்திச் சாலைகளுக்கு நோயாளர்கள் உட்பிரவேசிக்கும்போது கொண்டுச் செல்ல வேண்டிய அளவுக்கு இலவச சுகாதார சேவை தள்ளப்பட்டிருக்கும் பின்னணியில் அவ் வைத்தியசாலைகளை பணம் செலுத்தும் வாட்டுகளை அமைப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்ச்சியை தோற்கடிக்க வேண்டுமென அகில இலங்கை சுவசேவைகள் சங்கம் வலியுறுத்துகிறது. கடந்த 10ம் திகதி சங்க அலுவலகத்தில் இடமபெற்ற செய்தியாளா மாநாட்டில் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிரி தெரிவித்தார்.

அரச மருத்துவமனைகளில் பணம் செலுத்தும் வாட்டுகளை அமைப்பதினால் நோயாளர்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுமென்று கூறிய தோழர் காமினி அதன்படி பணம் செலுத்தும் நோயாளர்கள் நல்ல முறையில் கவனிக்கப்படுவது தவிர்க்க முடியாதென்றும் அப்படியில்லாத நோயாளர்கள் பாதிக்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். உத்தேச நடவடிக்கையின் காரணமாக நோயாளர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது தவிர்க்க முடியாது. 2011ல் அத்தியாவசியமான 71 மருந்து வகைகள் அரச மருத்துவ மனைகளில் தட்டுப்பாடு நிலவியதுடன் தரம் குறைந்த 100 வகை மருந்துகள் தரம் குறைந்தவையென கண்டுபிடிக்கப்பட்டது. இப்படியாக அரச வைத்தியச் சலைகளை மூடுவிழா நடத்தி பணம் செலுத்தும் வைத்தியச் சாலைகளாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாற நிலமைகளில் அரச மருத்துவமனைகளில் பணம் செலுத்தும் வாட்டுக்கள் அமைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை தோற்கடித்தாக வேண்டுமெனவும் வலியுறுத்தினார். இன்றைக்கு 12 வருடங்களுக்கு முன்னர் மருத்துவமனைகளின் பாதுகாப்பு தனியாருக்கு கையளித்தாகவும் அது இன்று பாரிய வீழ்ச்சியை சென்றுள்ளதாக கூறும் அரசாங்கம் பணம் செலுத்தும் வாட்டுகள் அமைப்பதன் மூலமாக முற்று முழுதாக இலவச மருத்துவச் சேவைகள் காவுக் கொள்வதற்கான முதலாவது கட்டமெனவும் குறிப்பிட்டார். தமது சங்கம் எழுத்துமூலமாக இதைப்பற்றி அரசாங்கத்திடம் வினவியிருப்பதாகவும் அதற்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் பொது மக்களோடு சேர்ந்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பபோவதாகவும் குறிப்பிட்டார்.


## தொழிலாளர் மாநாட்டில் கலந்தக்கொள்ள சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டாக்கா பயணம்



உலகில் 58 நாடுகளின் தொழிற் கட்சிகளின் பிரதிநிதிகளினதும் தொழிற்சங்க பிரதிநிதிகளினதும் பங்குபற்றும் "உலக பொருளாதார நெருக்கடியின் முன்னால் உழைக்கும் மக்கள் எடுக்க வேண்டிய பாதை" எனும் தொனிப்பொருளில் பங்களாதேசத்தின் டாக்கா நகரில் நடைபெற்ற மாநாட்டிற்கு அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர், மக்கள் விடுதலை முன்ன்ணியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் சமந்த கோரலே ஆராச்சி கலந்துக் கொள்வார். பங்களாதேசத்தின் தொழிலாளர் கட்சியின் அழைப்பிற்கு ஏற்ப இதில் கலந்துக் கொண்ட இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தவர், அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் மட்டுமேயாகும். மூன்று தினங்களாக நடைபெற்ற இந்த மாநாட்டின்போது பங்களாதேசத்தின் தொழிலாளர் கட்சியின் பிரதான செயலாளர் முகம்மது இஸ்லாம் தோழரோடு இலங்கையில் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள தொடர்பாக விஷேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

# குளறுபடி பரீட்சை முடிவுகளுக்கு

## எதிராக மக்களின் எதிர்ப்பு



கடந்த 2011ம் ஆண்டு ஆகஸ்ட மாதத்தில் நடாத்தப்பட்ட கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை முடிவுகள் குளறுபடிகளுக்கு எதிராக நாடு முழுவதும் பல பிரதேசங்களில் பாடசாலைகளை பாதுகா க்கும் இயக்கத்தின் ஏற்பாட்டின் கீழ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சோஷலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ அவர்கள் இதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினராவார்.

மகிந்த ராஜப்பக்ஷ அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடும் பொம்மையாக பரீட்சை ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முன்னாள் பரீட்சை ஆணையாளரோ கல்வி க்கு பொறுப்பான அமைச்சரோ அல்லது வேறு எவரும் பரீட்சை குழறுபடிக்கான பொறுப்பினை ஏற்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ குற்றத்தை யார் மீதும் சுமத்தாது தானும் தப்புவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு எனும் பொம்மலாட்டம் பினாமியமைப்பு அமைக்கப்பட்டது. அண்மையில் வெளியாகிய ஆணைக்குழு அறிக்கை பரீட்சை குளறுப்படிகள் பற்றி எதுவும் கூறாது எதிர்க்காலத்திற்கு தீர்வு யோசனைகளை முன்மொழிந்திருப்பது நகைப்புக்குறிய விடயமாகும்.

இதுதொடர்பாக கடுமையாக கண்டத்தை தெரிவிக்கும் பாடசாலைகளை பாதுகாக்கும் இயக்கம் பரீட்சை குழபைடிக்காக காரணம் ஜனாதிபதியின் பேச்சிதான் என்று பகிரங்கமாக கூறிய உயர் கல்வி அமைசர் எஸ். பி திஸாநாயக பரிட்சை முடிவுகள வெளியிடுதற்கு முன்னர் அவைகளை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது முண்னார் பரிட்சை ஆணையாரால் சட்டமா அதிபரின் ஆலோசலைகளை பெற்றுக்கொடுத்தார். அதேபோன்று புத்திஜிவிகள் கல்விமான்கள் மற்றும் தனி நபர்கள் z score கணக்கீட்டு முறையொன்றை அறிமுகப்படுத்தியிருத்தது பரீட்சைக்கு தேற்றியமாணவர்களின் தொகை 294.000 பேருக்கு கிடைத்த பரீடசை பெருபேறுகள் பெரும் சந்தேகத்தை எற்படுத்தியது.

## பெரும் திரளான அங்கத்தவர்கள் கலந்து கொண்ட மின்சார ஊழியர்களின் வருடாந்த விழா





இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் 10வது வருடாந்த விழா கடந்த 13ம் திகதி கொழும்பு பொது நூ லக கேடபோர் கூடத்தில் இடம்பெற்றது. அவ்விழவுக்கு வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதிலும் இருந்து பெரும் திரளான அங்கத்தவர்கள் கலந்துக் கொண்டனர்.

இந்த வருடாந்த விழாவில் பிரதான சொற்பொழிவினை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் தோழர் லால் காந்த அவர்கள் உரையாற்றியதுடன் இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக மீண்டும் தோழர் ரஞ்சன் ஜயலால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மின்சார சபை ஊழியர்கள் சம்பள உயர்வு போராட்டத்தை ஆரம்பித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் இப்படியான வருடாந்த விழாவினை நடத்துவது சிறப்பம்சமாகும். அது தமதுது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கு மினாரம், நீர் வழங்கள், மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன போராட்டங்களுக்கு பாரிய உந்து சக்தியாக அமைவது தவிர்க்க முடியாது. என்று லால்காந்த தனது உரையின்போது தெரிவித்தார்.மேலும் பல தொழிற்சங்கங்கள் தமது வாழ்த்துக்களை மாநாட்டிற்கு தெரிவித்தனர்.

## போக்குவரத்து ஊழியர்களின் வருடாந்த விழா வெற்றிகரமாக நடைபெற்றது.



அகில இலங்கை போக்குவரத்துச் சேவை சங்கம் தனது 14வது வருடவிழாவை கடந்த 10ம் திகதி நாராஹேபிட்டி சாலிக மண்டபத்தில் நடத்தியது. பெரும் திரளான அங்கத்தவர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்த வருடாந்த விழாவில் பிரதான சொற்பொழிவினை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் தோழர் லால்காந்த உரை நிகழ்த்தினார். புதிய நிர்வாக சபையை தெரிவு செய்யும்போது முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சேபால லியனகே மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் தலைவராக தோழர் காலிங்க தர்மசேனாவும் பொருளாளராக தோழர் சேனாதீராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## சட்டமூலமாக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிக்கொள்ளை

ராஜபக்ஷ அரசாங்கம் ஜனவாரி 18ம் திகதி ஊழியர் சேமலாப நிதி திருத்தச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது ஊழியர் சேமலாப நிதியை பராமரிப்பதற்கு அதன் பிராதான அலுவலகமாக அமைக்கப்பட்டுவரும் கட்டிடத்திற்கு அந்நிதியில் ஒரு தொகையை பெற்றுக்கொள்வது தமது நோக்கமாக கூறப்படுகிறது. தற்போது இந்த நிதியை பராமரிக்கப்படும் அலுவலகம் வாடகைக்கு பெற்றுள்ளதால் அதற்கு நிரந்தரமான கட்டிடமொன்று தேவை என்பது மேலோட்டமாக பார்க்கும்போது நியாயமாகவே படும். ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்தில் கபடத்தனம் நிறைந்திருக்கிறதென்பதை அவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும்போது தெரியவருகிறது.

நிறைவேற்றப்பட்டுள்ள ஊழியர் சேமலாப சட்டத்தில் குறிக்கப்படுவதாவது ஊழியர் சேமலாப நிதிய நிதிக்காக அமைக்கப்படும் கட்டிடத்திற்கு நிதியத்தில் இருந்து ஒரு தொகை பணம் ஒதுக்கப்படுகிறதாம் இந்த பணத்திற்கு உரிய வரையறை இருக்க வேண்டுமென பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்தினை அரசாங்கம் நிராகரித்தது. அதற்கினங்க இப்போது அரசாங்கத்திற்கு தேவையான அளவு பணத்தை இந்த நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

அரசாங்கம் தற்போது, ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (*ETF*) த்திற்கு கட்டிடத்தை அமைப்பதற்கல்ல அதை சாட்டாக்கி ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணத்தை சூறையாடுவதற்கேயாகும். இந்த நிதியத்திற்காக 30 மாடிகளை கொண்ட கடடிடத்தை கட்டுவதற்கான செலவில் 50% தை ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை பாவிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றியிருப்பது,மேற்கூறிய பணத்தை நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன: அது வேறு எதற்காகவுமல்ல. ஊழியர்களின் உரிமையை இந்த நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சூரையாடுவதேயாகும்.

அறிக்கைகளுக்கு ஏற்ப ஊழியர் நமபிக்கை நிதியத்தில் உள்ள மொத்த தொகை 11,000 கோடி ரூபாய்களாகும். .ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய மொத்த தொகை டிரில்லின் ரூபாயாகும். அதாவது ஒரு லட்சம் கோடி ரூபாய். அரசாங்கம் பொய்யான காரணத்தைக்காட்டி சூரையாடப்போவது ஊழியர் சேமலாப நிதியப்பணத்தையாகும். இதற்கு முன்னர் அரசாங்கத்தால் முன்வைத்து ஊழியர்களின் எதிர்ப்பினால் வாபஸ்பெறப்பட்ட தனியார் துறைக்கான ஓய்வூதிய சட்டமூலத்தை கொண்டுவர எத்தணித்தும் இந்தப்பணத்தை சூரையாடுவதற்கேயாகும். அரசாங்கம் இப்போது கொள்ளையடிக்கப்போவது 65 இலட்சம் தனியார் துறை ஊழியர்களின் பணத்தையாகும்.

இப்போது அரசாங்கம் இந்த நிதியத்தில் உள்ள பணத்தை பல்வேறு துறைகளில் முதலீடு செய்து பங்குச் சந்தையில் போட்டு அதனை வீண் விரயம் செய்து வருகிறது. அதற்கு மேலதிகமாக அரசாங்கம் இந்த நிதியத்தில் பெரும் தொகை கடனையும் பெற்றுள்ளது. கடந்த காலத்தில ஊழியர் சேமலாப நிதியத்தில் 26,900 மில்லியன் ரூபாவை பங்குச்சந்தையில் முதலீடு செய்துள்ளது. அதன்போது லாப் மற்றும் கிரேன் எளிவேட்டர்ஸ் கம்பனியின் பங்கினை பெற்றதனால் ஏற்பட்ட நட்டம் 11000 மில்லியன் ரூபாய்களாகும். ஊழியர்களின் பணத்தை சூரையாடி சூதாட்டம் ஆடிவருகிறது. இதற்கு புறம்பாக இந்த நிதியத்திலிருந்து 689 மில்லியன் ரூபாய் இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்திற்கு முதலீடு செய்துள்ள அரசாங்கம் திரைசேரி முறையின் மூலமாக இந்த நிதியத்தில் 90% கடனாகப்பெற்றுள்ளது.

இலங்கையின முதலாளித்துவ முறையினுள் ராஜபக்ஷ அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. போலி அபிவிருத்திகள் வெறும் “கனவுகளாக” மாறியுள்ளதுடன் உண்மையில் உற்பத்தி துறையின் வீழ்ச்சியின் காரணமாக நாடு கடன், வரி, அபராதம் விதித்தல் போன்ற வற்றிலேயே தங்கியுள்து. வரவு செலவு அறிக்கை திரைசேரி புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளப்போதிலும் உண்மையில் சொத்துக்கள் எதுவும் கிடையாது. பங்குச்சந்தையின் கணக்குகளும் போலியானவையாகும். பாரிய நிதி நெருக்கடியைச்சந்தித்துள்ள அரசாங்கம் அதன் காரணமாக பணம் குவிந்து இருக்கும் இடங்களை கொள்ளையடிக்க எண்ணுவது விசித்திரமான ஒன்றலல். இலங்கையில் பெருந்தொகையான பணம் குவிந்திருப்பது நீநு,நுவுகு நிதியத்தில் மட்டுமேயாகும். அரசாங்கம் இப்போது முயற்சித்திருப்பது இந்தப்பணத்தின் மூலமாக தமது நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காகவாகும்.

ஜனாதிபதி கடந்த காலத்தில் தேசத்தின் பிள்ளைகளின் பெருமைக்குரிய தந்தை என்பதற்குப்பதிலாக உழைக்கும் மக்களின் சொற்ப பணத்தையும் போதைக்கும், சூதாட்டத்திற்கும் விரயமாக்கிவிட்டு வெறும் கையோடு வீட்டுக்குள் நுழைந்து உண்டியலை உடைத்து பணத்தை எடுத்து வீன்விரயம் செய்யும் சுயநலமிக்க தந்தையாகவே காணப்படுகிறார். முதலாளித்துவ முறையினுள் பின்தங்கிய பொருளாதாரத்தினுள் ராஜபக்ஷ போன்ற ஆட்சியாளர்களிடம் வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாதென்பதால் நாட்டு வளங்களை நாசமாக்கி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் “கைவைத்துள்ள” ராஜபக்ஷ அரசாங்கத்தையும் முதலாளித்துவ முறையையும் ஒரே நேரத்தில் தோற்கடிக்கும் அரசியல் பயணத்தில் மக்கள் இணைந்துக்கொள்ள வேண்டிய காலம் கனிந்துள்ளது.

# இடைநிலை பாடசாலை அபிவிருத்தியெனும் மஹிந்தரின் மாய மான் சிந்தனை!

இடைநிலை பாடசாலைகளின் அபிவிருத்தி என்ற அரசாங்கத்தின் தேசிய செயற்றிட்டமானது தெளிவற்றதும் எதிர்கால நோக்கற்றதுமாக இருப்பதுடன் இது ஆரம்பப்பிரிவுகளை இல்லாதுசெய்யும் நடவடிக்கையாகவும் இருக்கின்றது. எனவே இத்திட்டத்தை உடனடியாக இடைநிறுத்தவேண்டும் என ஜே.வி.பி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. 2012 முதல் 2016ம் ஆண்டுகளுக்குள் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புகளை இல்லாது செய்வதற்கு கட்டம் கட்டமாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பினை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள ஜே.வீ.பி மேற்படி ஆரம்பப் பாடசாலைகளில் ஜனாதிப்பதியினதோ அமைச்சர்களினதோ பிள்ளைகள் பயிலவில்லையென்றும் அங்குசாதாரண மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரது பிள்ளைகளே பயின்று வருவதாகவும் கூறியுள்ளது. அரசாங்கத்தின் இந்தப்புதிய செயற்றிட்டம் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ள ஜே.வி.பி நாட்டின் சுகாதாரத்துறையில் மக்கள் எந்தளவு நம்பிக்கை இழந்துள்ளனரோ அதேப்போன்று தற்போது கல்வித்துறையிலும் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்றும் விசனம் தெரிவித்துள்ளது. ஜே.வி.பி தலமையகத்தில் நடைப்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் அனுர குமார திசாநாயக்க எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மக்கள் விடுதலை முன்னணி

இங்கு இவர் மேலும் கூறுகையில், நாடு முழுவதிலும் ஆயிரம் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை இடை நிலைப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யும் வகையிலான புதிய செயற்றிட்டம் ஒன்றினை கல்வி அமைச்சும் அரசாங்கமும் இணைந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கென கல்வி அமைச்சினால் சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலை வலையமைப்புக்காக இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி வேலைத்திட்டமானது இவ்வருடத்தில் இருந்து செயற்படுத்தப்படுவதாகவும் குறித்த சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. முதலில் 1000 பாடசாலைகளே இவ்வாறு அபிவிருத்திக்கு உட்பட்டிருக்கும் என்று கூறப்படடுள்ளப் போ்திலும் அது 5000 ஆக உயர்ந்துள்ளது. பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் எனும் வேலைத்திட்டத்தை நாம் எதிர்க்கவும் இல்லை. குறைத்து மதிப்பிடவும் இல்லை. எனினும் மேற்படி இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தியெனும் போது தரம் ஒன்று முதல் ஐந்து வரையான பாடசாளைகள் இங்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மேலும் இடைநிலைப் பாடசாலை என தேர்தெடுக்கப்படும் பாடசாலையொன்றில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் இல்லாது செய்யப்படுகின்றன. குறிப்பாக மேற்படி தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலையொன்றில் தரம் ஒன்று முதல் 13 வரையிலான வகுப்புகள் இருக்கும் பட்சத்தில் குறித்த ஆரம்பப் பிரிவு இங்கு இல்லாது செய்யப்படுகின்றது. அத்துடன் இல்லாது செய்யப்படுகின்ற வகுப்புகளை சேர்ந்த மாணவ,மாணவியர் பிரதான பாடசாலைகளில் இணைக்கப்படுகின்றனர். இதனால் இடநெருக்கடி மாத்திரமன்றி, பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது. அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் பிரகாரம் 2016ம் ஆண்டின் பின்னர் நாட்டில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான பாடசாலைகளும் தரம் 6 முதல் 13 வரையான பாடசாலைகளும் வெவ்வேறாக இயங்கவுள்ளன. இதன்படி இடைநிலை பாடசாலைகளாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாடசாலைகளில் இருந்து (2012 ஆம்) இவ்வாண்டில் முதலாம் தரத்தை நீக்கிவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக சுற்று நிருபம் அறிவிக்கின்றது. அதேப்போன்று 2013 இல் இரண்டாம் தரத்தையும் 2014 இல் மூன்றாம் தரத்தையும் 2015 இல் நான்காம் தரத்தையும் 2016 இல் 5ஆம் தரத்தையும் நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். இலங்கையை அறிவுக்கேந்திர மையமாக மாற்றியமைக்கும் வகையிலான மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு என்ற அடிப்படையிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக கூறப்படுகின்றது. இதன்படி 2016 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான ஆரம்பப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய வேலைத்திட்டம் என்றே இதற்கு பெயரிடப்பட்டிருக்கின்றது. பாடசாலைகளும் தரம் 6 முதல் 13 வரையிலான இடை நிலைப்பாடசாலைகளும் என் இருவகைப் பாடசாலைகளே இயங்கவிருக்கின்றன.

> பாடசாலைகளை அபிவீருத்தி செய்தல் எனும் வேலைத்திட்டத்தை நாம் எதிர்க்கவும் இல்லை. குறைத்து மதிப்பீடவும் இல்லை. எனினும் மேற்படி இடைநிலைப் பாடசாலை அபிவீருத்தியெனும் போது தரம் ஒன்று முதல் ஐந்து வரையான பாடசாளைகள் இங்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மேலும் இடைநிலைப் பாடசாலை என தேர்தெடுக்கப்படும் பாடசாலையொன்றில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் இல்லாது செய்யப்படுகின்றன. குறிப்பாக மேற்படி தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலையொன்றில் தரம் ஒன்று முதல் 13 வரையிலான வகுப்புகள் இருக்கும் பட்சத்தில் குறித்த ஆரம்பப் பிரிவு இங்கு இல்லாது செய்யப்படுகின்றது. அத்துடன் இல்லாது செய்யப்படுகின்ற வகுப்புகளை சேர்ந்த மாணவ,மாணவியர் பிரதான பாடசாலைகளில் இணைக்கப்படுகின்றனர். இதனால் இடநெருக்கடி மாத்திரமன்றி, பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிவொலூசனா? ரிவொலூசனா?

இலங்கையின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது தெடர்பாக அதிகாரப்பகிர்வு பேச்சு மீண்டும் தொடங்கியுள்ளது அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சரின வருகையோடு தேசிய பிரச்சினைக்கான தீர்வாக 13வது திருத்தச் சட்த்துக்கமை வான அதிகாரப்பகிர்வு திட்டம் சூடுபிடித்திருக்கிறது. மழை காரணமாக டெங்கு காயச்சல் பரவுவதைப் போன்று இந்திய அதிகாரிகளின் வருகையோடு இலங்கை ஆட்சியாளர்களின் இந்திய விஜயத்தை அடுத்தும் “அதிகாரப் பகிர்வு” தொடர்பான பேச்சுக்கள் அடிக்கடி பேசப்படுகிறது. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தேசிய ஒற்றுமையுடன் கூடிய பொருத்தமானதும் நிரதரமானதுமான உண்மையான தீர்வினை முன்வைப்பதில் தோல்விகண்டுள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களும் இலங்கை மீதான மேலாதிக்க கொள்கையை கடைபிடிக்கும் மேலாதிக்க சக்திகள் மற்றும் நாட்டையும் மக்களையும் பிரித்தாளும் தந்திரோபாயத்தை பின்பற்றும் உள்நாட்டின் சகல பிற்போக்குவாத அரசியல் சக்திகளும “டிவொலூசன்” எனப்படும அதிகாரப்பகிர்னை சுற்றி வலம் வந்துகொண்டிருக்கின்றனர்.



### ஊடகப் பேச்சாளர் கிருஷ்ணா

கடந்த ஜனவரி 16ஆம் திகதி இலங்கை வந்த இந்திய வெளிநாட்டமைச்சர் கிருஷ்ணா ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியபின் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தினார். அவ் ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்திய வெளிநாட்டமைச்சர் எமது வெளி நாட்டமைச்சரை பக்கத்தில்

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகான முடியாத ராஜபக்ஷ ஆட்சியும் அதன் பங்காளிகளும் இது தொடர்பாக அவர்கள் இரட்டை வேடத்தை தரித்துள்ளனர். இந்த இரட்டை வேடம் பிரச்சினையை மேலும்சிக்கலாக்கியுள்ளது. ஒருபுறத்தில் அதிகாரத்தை கைபற்றுவதற்கான வாக்குகளைப் பெறுவதற்காக சிங்கள இனவாதத்தை திருப்பதி படுத்துகின்ற அதற்கேற்ப கருத்துகளை தெரிவிக்கின்ற ராஜபக்ஷ ஆட்சி மறுபுத்தில் ஏகாதிபத்தியவாதிகளினதும் இந்தியாவினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்பட்டு பிரிவினைவாதத்தை போசித்து வருகின்றனர்

வைத்துக்கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பாலான அதிகார பகிர்வினை தீர்வாக வழங்குவதற்க்கு தன்னிடம் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக குறிப்பிட்டார். அதாவது .இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய வெளிநாட்டமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற இராஜதந்திர ரீதியிலான பேச்சு வார்த்தை முடிவுகளையும் இணக்கப்பாட்டையும் இலங்கை அமைச்சர் ஜி. எல். பீரிசை அருகில் வைத்துக் கொண்டு இந்திய அமைச்சர் கிருஷ்ணா ஊடகங்களுக்கு அறிவித்தமையும் ஜி.எல். பிரிஸ் அமைதியாக அமர்திருந்தமையும். இந்திய ஆதிக்கவாத அரசியக்கு அடிபணிந்து செயற்படும் இலங்கை அதிகாரிகளின் இயலாமைக்கு இது சிறந்த சான்றாகும்.

### கேலியவுக்கும் புரியாத செனட் சபை

கிருஷ்ணாவின் ஊடக கலந்துரையாடல் மூலமாக அரசாங்கத்தின் “பைக்குள் இருந்த பூனை வெளியே பாயய்ந்த கையோடு” கேலிய ரம்புக்கெல்ல பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தி 13க்கு அப்பாலான திர்வுக்கு இணங்கியுள்ளதாகவும் அதற்கிணங்க மாகாண அரசாங்கத்திற்கும் மத்திய அரசாஙகத்திற்குமிடையிலான தொடர்புகளை பேணுவதற்காக செனட் சபை ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். ஆனால் அரசங்கம் இந்தியாவுடன் இணங்கிய 13 க்கு “அப்பால்” என்பதைப் பற்றிய செனட் சபையின் செயற்பாடுகள் என்ன? என்பது பற்றியோ? அதற்கான உறுப்பினர்கள் எவ்வாறு நியமிக்கப்புவார்கள்? தேசியப் பிரச்சினை தீர்வு விவகாரத்தில் செனட் சபை எத்தகைய பங்களிப்பை வளங்கும் என்பது பற்றியோ எந்தவிதமான விளக்கமும் தெரிவிக்கப் படவில்லை. செனற்சபை பற்றி கேலியவுக்கே தெரிந்திருக்குமா என்பது சந்தேகமே. ராஜபக்ஷ அரசாங்கத்தின் நிலைப்பாடு மிகத் தெளிவானது 13 க்கும் அப்பாலான அதிகாரப்பகிர்வுக்கு இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது. அவ்வுறுதி மொழியையே இந்திய வெளவிவகார அமைச்சர் ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைக்கு அறிவித்தார். இதன் காரணமாக மகிந்தரின் தேசப்பற்று அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் நெருக்கடிகளை திசைதிருப்புவதற்கான தந்திரோபாயமே செனற்சபை நாடகமாகும்.

### 13 யாருக்காக?

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக இந்தியாவினால் பலவந்தமாக திணிக்கப்பட்டதே 13வது திருத்தமும் அதற்கிசைவான மாகாணசபை முறைமையுமாகும். இந்தியா வானத்திலிருந்து போட்ட பருப்புக்கு அடிபணிந்து ஜே.ஆர் ஜெயவர்த்தனா கைசாத்திட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு அமைவான 13வது திருத்த சட்டமூலத்திற்க்கு ஐ.தே.க யையும் எதிர்புரட்சிவாத கும்பல்களையும் தவிர ஸ்ரீ.ல.சு.க அடங்கலாக ஏனைய அரசியல் கட்சிகள் அனேகமானவை தமது எதிர்ப்பை தெரிவித்தன. 13வது திருத்தச் சட்டமூலம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கோ அவர்களது தேவைகளையோ பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல. அது இந்தியா மற்றும் தமிழ் முதலாளித்துவ சக்திகளின் பாதுகாப்புக்காகவும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் தயாரிக்கப்பட்ட தொன்றாகும். 13வது திருத்தச் சட்டமூலம் அமுலில் இருந்துவருகின்ற போதும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகிடைத்ததா? தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டதா? இவை எவயுமே நடக்கவில்லை, மாறாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை கூர்மையடையச் செய்து இனப்பிரச்சினையை மேலும். மேலும் சிக்கலாக்கவே உதவியுள்ளது. இதுவே நாம் அனுபவத்தில் கண்.ட .உண்மையாகும்.

### ஜே.ஆரின் 13 எம்.ஆரின் 13 பிளஸ்

இலங்கையில் பொருளாதார, சமூக அரசியல் என சகல துறைகளிலும ஜே.ஆர் சென்ற பாதையிலேயே அதைவிட வேகமாக பயணித்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ ஜே.ஆரின் திறந்த பொருளாதாரத்தின் இரண்டாவது இன்னிங்சை ஆடுவது போல தேசியப் பிரச்சினையிலும் ஜே.ஆரின் 13க்கும் அப்பால் செல்வதற்கு இணங்கியுள்ளார். ஜே.ஆரின் 13க்கு பதிலாக எம். ஆரின் 13 பிளஸ் அரங்கேறியுள்ளது. இதன் விசேடம்சமாக ஜே.ஆருக்கு பலவந்தமாக பருப்பு போட்டு திணித்த இந்தியா எம்.ஆரை பருப்பு போடாமல் 13 பிளஸ் இணக்கததிற்கு கொண்டு வந்துள்ளனர் இதற்காக இராஜதந்திரத்தையும் பலாத்காரத்தையம் மேலாதிக்கத்தையும் அதிகாரத்தையும் பிரயேகிக்கும் இந்தியா “மனிதவுரிமைகள் பிரச்சினை” “வடக்கு மக்களின் பிரச்சினை” போன்றவற்றை முன்நிறுத்தி ராஜபக்ஷ ஆட்சியை அடிபணியவைத்து இலங்கையின் பொருளாதாரத்தை கொள்ளையிட்டு வருகின்றது. மக்களுக்கு ஜனநாயகத்தை பெற்றுக்கொடுபப்தில் தோல்வி கண்டுள்ள அனைத்து மக்களுக்கும் சமத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை தீர்ப்பதில் தோல்விகன்டுள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகளையும் தீர்ப்பதில் தோல்வி கண்டுள்ள பின்தங்கிய முதலாளித்துவ முறையினுள் “ஆட்சி புரியும்” பலவீனமான கோழை ஆட்சியாளர்களுக்கு இதற்கு மாற்றாக வேறொன்றையும் செய்யவும் முடியாது. செயற்படவும் முடியாது.

### இந்தியா தந்திரமான பாதுகாவலனாக

இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் இயலாமை தோல்வி கண்டுள்ளதை இனங்காணுவதோடு நமது நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ் மக்களும் இந்தியாவின் தலையீடு பற்றிய உண்மையான நிலைமைளை புரிந்து கொண்டாக வேண்டும். இந்தியா மேலோட்டமாகவும் வார்த்தைகளிலும் உள்ளடகக்த்திலும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்று கொடுப் பதற்காகவே நடவடிக்கைகளை மேற்கொள்வதாக காட்டிக் கொன்டாலும் உண்மையில் இந்தியா செயற்பட்டிருப்பதும் செயற்பட்டு கொண்டிருப்பதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை பணயமாக வைத்து தமது அரசியல் மற்றும் பொருளாதார நோக்கத்தை இலங்கையில் நிறைவேற்றிக் கொள்வதேயாகும். இலங்கையின் சந்தையை கைபற்றுவதும் காணிகளையும் கடற்தொழிலையும் நிர்மானப்பணிகளில் ஈடுபடுவதும் எமது வளங்களை சூறையாவதுமே அவர்களின் பிரதான நோக்கமாகும். அதற்கிணங்க கடந்த காலங்களில் தமிழ் மக்களின் “உரிமைகளுக்காக குரலெமுப்பிய போதிலும் பெற்றுக்கொடுத்த உரிமைகள் என சொல்லிக் கொள்ளக்கூடிய எதுவுமே கிடையாது. அதேவேளை இந்தியா இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் உள்ளிட்ட (சம்பூர் காணிகள்) இலங்கை மக்களின் காணிகளை கபளிகாரம் செய்துள்ளதுடன் தமிழ் மக்கள் உள்ளிட்ட இலங்கை மீனவர்களுக்கு சொந்தமான கடலையும் மீன் வளங்களையும் சூறையாடி வருகிறது. இலங்கையின் கட்டிட நிர்மாணப்

இலங்கையில்பொருளாதார, சமூக அரிசியல் என சகல துறைகளிலும ஜே.ஆர் சென்ற பாதையிலேயே அதைவிட வேகமாக பயணித்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ ஜே.ஆரின் திறந்த பொருளாதாரத்தின் இரண்டாவது இன்னிங்சை ஆடுவது போல தேசியப் பிரச்சினையிலும் ஜே.ஆரின் 13க்கு அப்பால் செல்வதற்கு இணங்கியுள்ளார். ஜே.ஆரின் 13க்கு பதிலாக எம். ஆரின் 13 பிளஸ் அரங்கேறியுள்ளது. இதன் விசேடம்சமாக ஜே.ஆருக்கு பலவந்தமாக பருப்பு போட்டு திணித்த இந்தியா எம்.ஆரை பருப்பு போடாமல் 13 பிளஸ் இணக்கததிற்கு கொண்டு வந்துள்ளனர்


பணிகளுக்கு இந்திய தொழிலாளர்களை வரவழைத்து இலங்கை தொழிலாளர்களின் (தமிழ் மக்கள் உள்ளிட்ட) தொழில் வாய்ப்புகளை பறித்துள்ளது. இவற்றை பார்க்கும்போது இந்தியா தந்திரமான பாதுகாவலன் பாத்திரத்தையே வகித்து வருகிறது.

### தீர்வு யாருக்கு?

எல்லா பிரச்சிகைளையும் போன்று தேசியப் பிரச்சினைக்கும் இரண்டு தீர்வுகள் உள்ளன. அவைகளை பிரதான இரண்டு வர்க்க முகாம்கள் பிரதிநிதித்துவம் செய்கிறன ஒன்று முதலாளித்துவ வர்க்கத்தினரதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் வர்க்க தேவைகளுக்கு ஏற்ப முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்த எத்தனிக்கும் தீர்வாகும் அடுத்தது பாட்டாளி வர்க்கத் தீர்வாகும். முதலாளித்துவ வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியுவாதிகளினதும் தீர்வின் அடிப்படையாக அமைந்திருப்பது தேசிய

10ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிலாளர்களுக்குத் தெரியாமல் தோட்டங்கள் தனியாருக்கு விற்பதற்கு எத்தனிப்பு



தற்போது உப குத்தகை என்னும் பெயரில் தோட்டங்கள் படிப்படியாக தனியாருக்கு விற்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்விதமான அறிவித்தலும் கொடுக்கவில்லை. ஆனால் தற்போது உப குத்தகை எனபதையும் மீறி தற்போ நிர்வாகிக்கும் கம்பனிகள் வேறு சில கம்பனிகளுக்கு விற்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. குறிப்பாக நட்டத்தில் இயங்குவதாக தொடாச்சியாக கூறும் மஸ்கெலியா மற்றும் மல்வத்தவெலி, கேகாலை போன்ற கம்பனிகள் தொடர்ச்சியாக நட்டம் என்னும் போலி மாயையைத் தொழிலாளர்களின் மத்தியில் காட்டி நாட்சம்பளம் அல்லது கைகாசு என்னும் தந்ரோபாயத்தை கையாண்டு வருகிறது. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித்தான EPF.ETF போன்றவற்றையும் வங்கிகளில் வைப்பிலிடாமல் இருக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு அங்கமாக பயன்படுத்தி படிப்படியாக தோட்டங்களை விற்பதற்கு முடிவெடுத்துள்ளது. அதற்கு உதாரணமாக கடந்த காலத்தில் ஊவா பரணகமயை அண்மித்த தோட்டங்கள் உபகுத்தகைக்கு விடப்பட்டுள்ளன. தற்பேர்து பதுளை மற்றும் காலி, மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சில தோட்டங்களும் ,விற்பனை செயயப்பட உள்ளன. 1992ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தால் தோட்டங்கள் தனியாருக்கு விற்கப்படுகின்றப்போது எவ்வித அறிவித்தலுமின்றி கம்பனிகளுக்கு விற்கப்பட்டதைப்போன்று தற்போதும் தொழிலாளர்களுக்கு இது தொடர்பாக எவ்வித அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை.

## தரிசு நிலம் என்னும் போர்வையில் தோட்டத் தொழிலாளர்களின் மரக்கறி தோட்டங்களுக்கு வேட்டு



தோட்டத் தொழிலாளர்களின் விவசாய காணிகளை சுவீகரிப்பதற்கு மறைமுகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் தாம் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு சுற்றுப்புறத்திலும், தேயிலைத் தோட்டத்தில் உள்ள தரிசு நிலங்களிலும் விவசாய நிலங்களை அமைத்து அதாவது மரக்கறி தோட்டங்களை அமைத்து தமது ஜிவனோபாயங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதனை கவனத்தில் கொண்ட அரசாங்கம் மற்றும் சில அரசியல் வாதிகளினூடாக கடந்த காலங்களில் தோட்டத்தில் வசிக்கும் நபருக்கே வீடும் அதனை சுற்றியுள்ள மரக்கறி நிலம் அல்லது சுற்றுச்சூழல் சொந்தம் எனக்கூறி தோட்டங்களை அரசாங்க நிர்வாகிப்பில் இருந்து கம்பனிகளிடம் தொழிலாளர்களின் கண்ணில் மண்ணைத்தூவி கொடுத்தனர். அப்போது அவ்வாறு சொன்னபோது தொழிலாளர்கள் சந்தோசத்தில் மயங்கியிருந்தானர். அன்று சொல்லப்பட்ட வாக்குறுதிகள் உண்மையானதா என்பதை தோட்டத் தொழிலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் தற்போதும் ஆழும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில அரசியல் வாதிகளும் ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகிக்கும் சில அரசியல் வாதிகளும் தொழிலாளர்கள் மத்தியில் இவ்வாறு பூச்சுற்றுகின்றனர். அதாவது தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென. இவர்கள் இவ்வாறு கூறுவது தொடர்பாக அவதானிக்கும்போது தொழிலாளர்களுக்கு தரிசு நிலங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வைத்திருக்கும் வேலைத்திட்டம் என்ன தற்போது கம்பனிகள் வசம் உள்ள தேயலைத் தோட்டங்கள அரசுடமையாக்கப்பட்டுள்ளதா? அல்லது அரசுடமையாக்கப்படுவதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை தோட்டத் தொழிலாளர்கள் அவதானிக்க வேண்டும்.

இவ்வாறு இந்த தொழிற்சங்க மற்றும் அரசியல்வாதிகள் தொழிலாளர்கள் மத்தியில் கூறுவதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. அதாவது தற்போது அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கும் யோசனையான நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பொறுப்பேற்றல் என்னும் திட்டத்தில், நிறுவனத்தில் தோடடத்தொழிற்றுறையும் ஒன்றாகும் அரசாங்கம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு தேவையான சுற்றுச்சூழல் மத்திய மலைநாட்டில் அமைந்துள்ளது. சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப வேண்டுமானால் கட்டாயம் மலைநாட்டில் காணி அவசியம் ஆனால் அவ்வாறு காணிகள் இல்லாத காரணத்தால் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும்

10 பக்கம் பார்க்க

# போராட்டத்திற்கு தயாராகும் தோட்டத் தொழிலாளர்கள்



ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்திற்கான வேலையின் அளவை அதிகரிக்கக் கோரியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து டிக்கோயா போடைஸ் தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் அடையாள பணிநிறுத்தப் போராட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

டிக்கோயா பிரதேசத்திலுள்ள போடைஸ் முப்பது ஏக்கர்,புதுக்காடு ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இந்தப்பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் ஆண் தொழிலாளர்கள் ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்திற்காக இதுவரை காலமும் 14 கிலோ கொழுந்தினையும் பெண் தொழிலாளர்கள் 16 கிலோ கொழுந்தினையும் பறித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் ஆண், பெண் தொழிலாளர்கள் 18 கிலோ கொழுந்தினைப் பறித்தால் தான் ஒரு நாள் அடிப்படைச்சம்பளம் வழங்கப்படுமென்று தோட்ட நிருவாகம் அறிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே போராடடத்தை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் கடந்த காலத்தில் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை வேலை வாங்குவதற்காக இராணுவம் மற்றும் பொலிஸாரை பயன்படுத்தயது. அதன் காரணமாக உண்மையான உழைப்பாளிகளின் போராட்டம் தற்காலிகமாக முடக்கப்பட்டது.

அத்துடன் தற்போது அரசாங்கமும் தோட்ட நிர்வாகங்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் தோட்டத் தொழிலாளர்கள் போராடுவதற்கு தயாராகியுள்ளார்கள்..

# நவீன சிந்தனையில் மஹிந்தரின் அரசாங்கம்



அவுஸ்திரோலியாவிலிருந்து 290 இலட்ச ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கறவை பசுக்களை கால்நடை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் குழு பார்வையிடுவதையே படத்தில் கான்கின்றீர்கள்

கடந்த ஜனவரி 19ம் திகதி கால் நடை அபிவிருத்தி அமைச்சினால் வெளிநாட்டிலிருந்து பத்து கறவை இனப்பெருக்கப்பசுக்கள் கால் நடை அமைச்சினால் இலங்கைக்கு விமானமூலம் கொண்டுவரப்பட்டன.கொண்டுவரப்பட்ட பத்து பசுக்களுக்கும் 290 இலட்சம் ரூபாவென அமைச்சு கூறுகிறது. அமைச்சின் கூற்றுப்படி ஒரு கறவை பசுவுக்கு 29 இலட்சம் ரூபாவாகிறது. அப்படி பெருந்தொகை கொடுத்து கறவைப் பசுக்களை கொண்டுவந்து இனப்பெருக்கம் செய்து அதனை பண்ணை அல்லது கால் நடை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இன்னும் மூன்று வருடங்கள் செல்லும். அப்படியாயின் கொண்டுவரப்பட்டிருக்கும் பசுக்களின் பெறுமதிப்படி ஒரு பசு 100லீட்டர் பாலாவது கறக்க வேண்டும். கொண்டுவரப்பட்டிருக்கும் பசுக்கள் 25 லீட்டர் பாலாவது கறக்குமா என்பது சந்தேகமே. அவ்வாறான நிலையில் கொண்டுவரப்பட்டிருக்கும் பசுக்களின் பின்னணியில் பாரிய மோசடி நிகழ்ந்திருப்பது தெட்டத்தெளிவானது. அதுவும் அரசாங்கம் சார்ந்த மோசடியாகும்.

பால் பண்ணைத்துறையை ஊக்குவிக்க வேண்டுமானால் அரசாங்கமும் கால்நடை அமைச்சு, பொருளாதார அமைச்சும் உலக பால் உற்பத்தி நாடுகளு் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு புதிய திட்டங்களையும் புதிய உபாயங்களையும் முன்னெடுத்து அல்லது கீழைத்தேய பண்ணை முறைமையை யாவது பின்பற்றி பாலுற்பத்தி துறையை ஊக்குவிக்க வேண்டும். ஆனால் தற்பொது முன்னெடுகக்கப்படம் திட்டமானது. கால்நடை ஊக்குவிப்பு என்னும் பெயரில் கொள்ளையடிப்பதாகும். இதுதான் மஹிந்தரின் நவீன சிந்தனையாகும். அதன் விசேடம் என்னவெனில் கொண்டுவரப்பட்டிருக்கும் 10 பசுக்களுக்கு 290 இலட்சம் என்னும் போது ஒரு பசுவின் விலை 29 இலட்ச ரூபாவாகும். புதிய சாதனையை தொடங்கியிருக்கும் மஹிந்தவுக்கும் கால்நடை அமைச்சர் தொண்டமானுக்கும் கால்நடை உற்பத்தி விவசாயிகளும், தோட்டத் தொழிலாளர்களும் நன்றி தெறிவிக்க வேண்டாமா? உன்னத ஏமாற்றுக்கு நல்ல உதாரணம். இத்தொகையை தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்திருந்தால் மலையகத்தில் பெரும் பண்ணை ஒன்றையே ஆரம்பித்திருக்கலாம் என விமர்சகர்க்ள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிக

## மேலும் வ

# போரா

**இன்று விவசாயிகள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுத் தலைவருமான தோழர் அநுர திசாநாயக்க அவர்களுடனான நேர்காணல்**

***செஞ்சக்தி:*** அண்மைக் காலமாக விவசாயிகளின் போராட்ங்கள் ஆர்பாட்டங்கள் ஊடகங்களில் குறைவாகவே காணமுடிகிறது. ஏன் இப்போது அவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதா? அல்லது மக்களிடமிருந்து மறைக்கப்பட்டுவிட்டதா?

***தோழர் அநுரதிசாநாயக்க:-*** விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது மட்டுமல்ல நாளுக்கு நாள் அவர்களின் பிரச்சினைகள் உக்கிரமடைந்த வண்ணமேயுள்ளது. அண்மையில் மரக்கறி மற்றும் பழவகைகள் விரயத்தைக் குறைப்பதற்காக விவசாயிகளின் மீது மேலும் சுமையை ஏற்றுகின்ற பிளாஸ்டிக் கூடை முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.அதற்கெதிராக விவசாயிகள் பாரிய போராட்டத்தினை மேற்கொண்டு அத்திட்டத்தினை தோற்கடித்தனர். அதன்போது எழுந்த விரயமாவதை தடுப்பதற்காக முறையான வேலைத்திட்டத்திற்குப் பதிலாக கூடை வியாபாரிகளின் யோசனைக்கு எற்ப கொண்டு வந்ததையே இங்கு பிரதான காரணமாக அமைந்தது. அதே போன்று தற்போது விவசாயிகளுக்கு ஓய்வுதியம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம்பெறும் 110,000 பேர் உள்ளனர். அதே போன்று ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்த விவசாயிகள் 10 இலட்சத்திற்கு அதிகமாகும்.தற்போது அவர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதே போல் விவசாயிகளுக்கு நல்ல விலைக்க தமது உற்பத்திகளை விற்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும் உற்பத்தி செலவுகள் அதிகரிப்பினால் தோன்றியுள்ள நெருக்கடிகளும் பாரிய ஒன்றாகும். அதே போன்ற விவசாயிகளின் மூன்றாவது பரம்பரையின் பிள்ளைகளுக்கு



விவசாயம் செய்வதற்கு முறையான காணிப்பகிர்வு கடந்த 30 வருடங்களில் இடம்பெறவில்லை. அதற்குப்பதிலாக கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் தாரைவார்க்கப்பட்டுக கொண்டிருக்கிறது. விவசாயத்தை முதன்மையாகக்கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்கள் இன்று சுற்றுலாத்த்துறையை கவர்வதற்கென கூறிக்கொண்டு தற்போது அதில் சீ பிளேன் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போன்று சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைவிட மூன்று நான்கு மடங்கு விவசாயிகளின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

***செஞ்சக்தி:*** விவசாயிகள் முகம்கொடுக்கும் நீங்கள் குறிப்பிட்ட பிரச்சிசனைகளைத் தீர்ப்பதற்காக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் இடையீடு எவ்வாறானது?

***தோழர் அநுரதிசாநாயக்க:-*** தற்போது விவசாயிகளுக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்காமைக்கு எதிராக விவசாய பகுதிகளில் ஆர்ப்பாட்ட இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்அதேபோன்றுவிவசாயிகளைதெளிவுபடுத்தும் நோக்குடன் பிரச்சார இயக்கமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இன்று விவசாயிகளின் உரிமைகளுக்காக என்றுமில்லாதவாறு கூடுதலாக அணிதிரள வேண்டிய சூழல் விவசாயிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. அதற்காக எமது சங்கம் மாவட்ட ரீதியாக எமது விவசாய அமைப்புகளை பலப்படுத்தி வருகின்றோம். ரஜரட்ட வாழ் விவசாயிகள் முகம்கொடுக்கும் பிரதான பிரச்சினைகளில் சிறுநீரக கோளாறு பிரச்சினையாகும். அந்நோய் ஏற்படுவதற்கான காரணத்தைக்கூட அரசாங்கத்தால் கண்டறிய முடியவில்லை. அதனால் அதற்கெதிராக எமது சங்கம் குரல் கொடுத்து வருகிறது. அன்றாடம் எழும் பிரச்சினையைப் போன்றே விவசாயிகள் முகம் கொடுக்கிகன்ற பிரச்சினைகளுக்காக பொது சமூக நோக்கத்துடன் இணைந்து போராடுவதற்கு எமது சங்கம் விவசாயிகளை அணித்திரட்டி வருகின்றது.

***செஞ்சக்தி:*** வடக்கு கிழக்கு விவசாயிகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி உங்களது சங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

***தோழர் அநுரதிசாநாயக்க:-*** உண்மையில் வட கிழக்கில் வாழும் விவசாயிகள் ஏனைய பிரதேசங்களை விட பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். 30 வருட யுத்தத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டவர்கள் வடக்கு ,கிழக்கு விவசாயிகளேயாகும். இன்று யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் அண்மித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவருவதற்கு ஏனைய பிரதேசங்களில் உள்ள விவசாயிகளைப் தங்களது உரிமைகளுக்காக போராடுவதைப்போன்ற உரிமை வட-கிழக்கு விவசாயிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான இடையூறுகளுக்கு எதிராக விவசாயிகளை அணித்திரட்ட வேண்டும்.

விசேடமாக இன்று வடக்கு, கிழக்கு விவசாயிகள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றான நெல்லுக்கு நியாய விலை கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக விவசாயிகளின் நெல் கொள்ளை விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது. விசேடமாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர். இன்று அவர்கள் உற்பத்தி செய்யும் நெல் 15/= தொடக்கம் 18/= ரூபாய்களுக்கே விற்க்கப்படுகிறது. அரசாங்கத்திடம், மாகாண நிர்வாகத்திடம் பல தடவைகள் அம்மக்கள் முறையிட்டப்போதும் நியாயமான தீர்வுகள் எவையும் கிடைக்கவில்லை. ஆகவே எமது சங்கம் எதிர்வரும் நாட்களில் இவர்களின் பிரச்சினையில் கூடுதல் கவனம் செலுத்தும் என்பதை உறுதிப்பட கூறுகின்றோம்.


***செஞ்சக்தி:*** விவசாயத்துடன் நெருங்கிய தொடர்புள்ள பிரச்சினை காணிப்பிரச்சினையாகும். பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட காணி அதிகாரமும்பகிரப்பட வேண்டுமென கருத்துக்கள் வெளியாகுகின்றன. இது தொடர்பாக உங்கள் கருத்தென்ன?

***தோழர் அநுரத்சாநாயக்க:-*** காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தையும் மாகாணசபைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் 13ம் திருத்தத்திற்கு அப்பால் செல்லும் தீர்வினை பெற்றுக்கொடுத்தல் மற்றும் இலங்கையின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வாகுமென இந்தியாவும், இலங்கை அரசாங்கமும் தமிழ் மேட்டுக்குடி தலைமைத்துவமும் சுறு முதலாளித்துவ கும்பலும் மந்திரமாக ஓதிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அதிகாரத்தை பகிர்வதன் மூலம் ஒரு போது அது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.அது மகக்ளின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் சந்தேகத்தையும், நம்பிக்கையீனத்தையும் கூர்மையடையச்செய்வதாகும். உண்மையில் இது அதிகாரப்பகிர்வல்ல. மக்களின் மிது அழுத்தங்களைப் பிரயோகின்னதற்கும் அதே போன்று அடக்குமறையை கட்டவிழ்த்துவிடுவதற்காக சாதகமாகவே அமையும் இதன் கருத்தானது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சியுனுள் இந்த பிரச்சினையை தீர்க்க முடியுமென்பதல்ல. மக்களிடையே சமத்துவமின்மை, தேசிய இன அடிப்படையில் பாகுபாடுகளை உறுதிப்படுத்தும், ஜனநாயக சுதந்திரம் இல்லாத வரையில் ஒற்றையாட்சி என்பது

> எமது நாட்டு பொருளாதாரத்தில் பெரும் பகுதியை விழுங்கியுள்ளனர். வாகன வியாபாரத்தை இந்தியா கைப்பற்றியுள்ளது. மேலும் எமது நாட்டிலுள்ள தேசிய தொழில் துறையை ஆபத்தில் தள்ளும் 'சீபா' உடன்படிக்கைக்கான அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர். நாட்டில் பாதுகாப்புக்கு மிக முக்கியமான மின் சக்தி துறைக்கும்அவர்கள் பிரவேசித்துள்ளனர். அதற்கிணங்க பெற்றோலிய சந்தையில் 1/3 பங்கை IOC நிறுவனம் கைப்பற்றியுள்ளது. சாம்பூர் அனல்மின் நிலையத்தின் மூலமாக மின்சாரத் துறையையும் கையகப்படுத்தியுள்ளனர். வடக்கு புகையிரத வீதித்திட்டம், கொழும்பு மாத்தறை புகையிரத பாதையை அதிவேக பாதையாக்கும் திட்டம், பலாலி விமான நிலையம்,. காங்கேசன்துறைமுகம், துரையப்பா விளையாட்டரங்கை புனரமைத்தல் போன்றவற்றை அவர்கள் கைப்பற்றியுள்ளனர். பெருந்தொகையாக காணிகள் இந்திய ஹோட்டல்களுக்காக கையளிக்கப்பட்டுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளின் வாழ்வை
## ளப்படுத்துவதற்காக
# டத் தயார்



மக்கள் விடுதலை முன்னணியன் பாராளுமன்ற உறுப்பினர்
தோழர் அநுர திசாநாயக்க

பலாத்கார மையப்படுத்துவதாகும். அதனால் இப்போதுள்ள ஒற்றையாட்சியின் மூலமாக இந்தப்பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாது. தேவைப்படுவதெல்லாம் சமத்துவமின்மையை ஒழிக்கின்ற சம வாய்ப்புகளை ஏற்படுத்துகின்ற ஜனநாயக மையப்படுத்தலாகும். அதை ஒரு போதும் நமது நாட்டிலிருக்கும் நலிவடைந்த, நாற்றமெடுக்கும் முதலாளித்துவ முறையால் நடைமுறைப்படுத்த முடியாது என்பது உண்மை. இதனை உண்ணிப்பாக அவதானித்த இந்தியா 13வது திருத்தத்தை(13+)காட்டி தங்களது பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது மட்டுமேயாகும்.

**செஞ்சக்தி:** இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் அழுத்தம் அதிகரித்துள்ளது. இலங்கையின் கடற்பரப்பில் மீன் பிடிக்கும் முடிவுகளில் இருந்து (13+) திருத்தத்திற்கு அப்பால் செல்ல வேண்டுமென வலியுறுத்துவதிலிருந்து தொடரும் காரணிகள் மிக நீண்டதாகும். இந்த நிலைமையின் கீழ் ராஜபக்ஷ அரசாங்கத்தின் போக்கு எப்படி அமையும்?

**தோழர் அநுரதிசாநாயக்க:-** நான் முன்னர் கூறியவாறே இந்தியாவுக்கு இருப்பது வேறு நோக்கமாகும். அவர்கள் எமது நாட்டு பொருளாதாரத்தில் பெரும் பகுதியை விழுங்கியுள்ளனர். வாகன வியாபாரத்தை இந்தியா கைப்பற்றியுள்ளது. மேலும் எமது நாட்டிலுள்ள தேசிய தொழிற்றுறையை ஆபத்தில் தள்ளும் "சீபா" உடன்படிக்கைக்கான அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. நாட்டில் பாதுகாப்புக்கு மிக முக்கியமான மின் சக்தி துறைக்கும் அவர்கள்

**விசேடமாக இன்று வடக்கு, கிழக்கு விவசாயிகள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றான நெல்லுக்கு நியாய விலை கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக விவசாயிகளின் நெல் கொல்லை விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது. விசேடமாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர். இன்று அவர்கள் உற்பத்தி செய்யும் நெல் 15.00 தொடக்கம் 18.00 ரூபாய்களுக்கே விற்க்கப்படுகிறது. அரசாங்கத்திடம், மாகாண நிர்வாகத்திடம் பல தடவைகள் அம்மக்கள் முறையிட்டப்போதும் நியாயமான தீர்வுகள் எவையும் கிடைக்கவில்லை. ஆகவே எமது சங்கம் எதிர்வரும் நாட்களில் இவர்களின் பிரச்சினையில் கூடுதல் கவணம் செலுத்தும் என்று உறுதிப்பட கூறுகின்றோம்**

பிரவேசித்துள்ளனர். அதற்கிணங்க பெற்றோலிய சந்தையில் 1/3 IOC நிறுவனம் கைப்பற்றியுள்ளது. சாம்பூர் அனல்மின் நிலையத்தின் மூலமாக மின்சாரத் தறையையும் கையகப்படுத்தியுள்ளனர். வடக்கு புகையிரத வீதித்திட்டம், கொழும்பு மாத்தறை புகையிரத பாதையை அதிவேக பாதையாக்கும் திட்டம், பலாலி விமான நிலையம்,. காங்கேசண்துறைமுகம், துரையப்பா விளையாட்டரங்கை புனரமைத்தல் போன்றவற்றை அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.பெருந்தொகையாக காணிகள் இந்திய ஹோடடல்களுக்காக கையளிக்கப்பட்டுள்ளன. அதன்படி நமது நாட்டின் பொருளாதார கேந்திர நிலையங்களை அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.
எந்தவொரு நாட்டினதும். பொருளாதாரத்தை இன்னுமொரு நாடு கைப்பற்றிக் கொள்ளும்போது அதை கைப்பற்றிய நாடு அப்பொருளாதாரத்தினூடாக கைப்பறிய பகுதியையும் பாதுகாப்பதற்கு மேலும் தன்வயப்படுத்திக் கொள்வதற்கும்இயலுமான சகலவித தந்ரோபாயத்தையும் பயன்படுத்துவர். அதற்காக அந்நாட்டின் அரசியலை அவர்களுக்கு தேவையான முறையில் நகர்த்த வேண்டும். அதனால் இன்று இந்தியா அந்த காரியத்தையே செய்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளின் முன்னால் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கோழைகளாக அடிபணிவதைத்தவிர வேறு மார்க்கமில்லை. அண்மையில் இலங்கைக்கு வருகைத்தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் 13க்கு அப்பால் செல்லும் தீர்வினை வழங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ இணங்கியிருப்பதாக தெரிவித்தார். தேசிய பிரச்சினையின் தீர்வு தொடர்பாக இலங்கைக்கு அறிவித்தவர் இந்திய வெளிவிவகார அமைச்சராகும். அது தமிழ் நாடோ, ஆந்திராவோ என்றால் நமக்குப்பிரச்சினை கிடையாது. ஆனால் இது இலங்கை. இறைமையுள்ள நாடு. இலங்கையை இந்தியாவின் இன்னுமொரு மாநிலமாகக் கருதியே இந்தியா செயற்படுகிறது. அதைக்கண்டு தேசப்பற்றறுளள( போலி) மஹிந்த அரசாங்கம் அஞ்சி, நடுங்கி, மண்டியிடுகிறது. இதிலிருந்து இவர்களின் அடிமை மனோபலம் நன்கு புரிகிறது.

**செஞ்சக்தி:** தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிமிக்க அரசியல் சூழலில் மக்களுக்கு வழி காட்டும் அரசியல் இயக்கத்திற்கு பெரும் பாத்திரத்தை வகிப்பதற்காக நிலை தோன்றியுள்ளது. அதை வெற்றிக்கொள்வதற்கு மகக்ள் விடுதலை முன்னணி வசமுள்ள வேலைத்திட்டம் எனன்? அதை சூழ மக்களை அணித்திரட்ட முடியுமென்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

**தோழர் அநுரதிசாநாயக்க:-** நாளுக்கு நாள் உக்கிரமடையும் சமூச நெருக்கடிகளை கோடிட்டு காட்டுவது, புரிய வைத்துக்கொண்டிருப்பதும் இனியும் இந்த சமூக முறைமையினுள் காணப்படும் நெருக்கடிகளுக்கு தீர்வு இல்லாதது மட்டுமல்ல, பிரச்சினை மென்மேலும் உக்கிரமடையுமென்பதாகும். அந்நெருக்கடியின் முன்னால் ராஜபக்ஷ ஆட்சிக்கு எஞ்சியிருப்பது மேலும் இலவச மானியங்கள் மற்றும் சேவைகளைப் பறித்தல் ஏகாதிபத்தியத்திற்கு நாட்டு பொருளாதாரத்தின் சாற்றை பிழிந்த குடிப்பதற்கு இடமளித்தல், இயற்கை வளங்கள் மற்றும் மக்கள் சொத்துக்களை பல்தேசிய கம்பனிகளுக்கு தாரைவார்த்தலுக்கான நவலிபரல் முதலாளித்துவத்தின் மார்க்கமேயாகும்.
அது என்றுமில்லாதவாறு இன்று நடைபெறும் சம்பவங்கள் மகக்ளை தேளிவடையச்செய்துள்ளது. அதாவது இந்த சமூக முறைமையினுள் இயலாமையாகும். புதிய சமூக முறைமையின் தேவையாகும். அதற்காக மக்கள் விடுதலை முன்னணி இந்நாட்டின் சகல ஒடுக்கப்படட மக்களின் விடுதலைக்காக, சுதந்திரத்திற்காக போராடிவருகிறது. அந்த போராட்டத்தை வெற்றிகொள்ள முடியுமென்ற நம்பிக்கை எமக்கு திடமாகவே இருக்கிறது. அதற்காக தலைமைத்தாங்குவதற்கு பலம்பொருந்திய கட்சியொன்றை தோழர் ரோஹன விஜேவீர உருவாக்கியுள்ளார். இன்று எம்முன்னால் உள்ள பணி அந்தக்கட்சியை வெற்றியை நோக்கிச் கொண்டு செல்வதேயாகும்.. அதற்காக ஒடுக்கப்பட்ட சக்திகளும் ஒரு மத்திய நிலையத்தின் கீழ் ஒன்று திரட்டுவதற்காக நாம் எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாற்றம் வேண்டும்...

**பெயர் ராஜேஷ்,**
**பிறப்பிடம் ஹற்றன்**

எமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது நாம் சந்திக்கும் பெரும்பாலான இரு நபர்கள் உள்ளனர். அவர்கள் கன்டெக்டர்மார்களும், ஹோட்டல் வெயிட்டர்மார்களும் ஆகும். அரசியல் நடவடிக்கைகளுக்காக எப்போதும் பஸ்களில் பயணிப்பதும் குறிப்பாக தூரத்து பயணம் போகும் போது இடையில் நிறுத்தப்படும்போதும் ஹோட்டல்களில் அல்லது நெருங்கிய நண்பரொருவரை சந்தித்ததன் பின்பும் தேநீர் அருந்துவதற்கு ஹோட்டல்களுக்கு சென்ற பின்பு எப்போதும் வெயிட்டர்களை சந்திக்கிறோம். நீங்கள் இவர்களுடன் உணவு ஓடர் செய்வதற்கு மேலதிகமாக வேறேதும் கதைத்துள்ளீர்களா? கதைத்துள்ளீர்களேயானால் உங்களுக்கு ஓர் பொதுவான உண்மை விளங்கியிருக்கும். அது பெரும்பாலான ஹோட்டல்களில் ஒரே ரக வெயிட்டர்களையே சந்திக்க முடியும். அவ்வாறு சந்தித்த ஒரு நபர்தான் ராஜேஸ் ஆகும் அவர்களின் ஊர் மலைநாட்டைச் பிறப்பிடமாகக்கொண்டவர்.

எமது நாட்டில் அண்மைக் காலம்வரை சிங்களர்வர்களுக்கு உரிமையான கடைகளுக்கு கடை உரிமையாளர்களின் ஊர்களிலிருந்து சிங்கள வேலையற்ற இளைஞர்களை கொண்டுவந்து



சேவையில் அமர்த்தினர். முஸ்லிம் ஹோட்டல்களில் பெரும்பாலும் முஸ்லிம் இளைஞர்களே வேலைசெய்தனர். தமிழ் கடைகளில், ஹோட்டல்களில் தமிழ் இளைஞர்களை சேவையில் அமர்த்துவது பொதுவான நிலமையாகும். ஆனால் தற்போது இந்நிலமைகள் முற்றாக மாறிவிட்ட ஹோட்டல்களில், கடைகளின் உரிமையாளர் யாரானாலும் வெயிட்டர்மார்கள் அல்லது பணியாளர்கள் தோட்டப்புற தமிழர்களையே அதிகமாக காணக்கூடியதாகவுள்ளது. அப்பம், ரொட்டி, சமைப்பவர்கள் தோட்டப்புற தமிழ் இளைஞர்களாகவே காணப்படுகின்றனர். மலையக இளைஞர்களான ராஜேஸ்கள் சந்திக்கும் இன்னும் பல இடங்கள் உள்ளது அவற்றுள் எரிபொருள் நிரப்பகங்கள், வாகனங்கள் கழுவி சுத்தம் செய்யும் நிலையங்கள் மற்றும் கட்டிட பொருட்கள் விற்பனை நிலயங்கள் இவற்றுள் முதன்மையாகும்.
ஹற்றன் பகுதி தோட்டப்புறமொன்றின் ராஜேஸ்களின் குறிப்பே...
கீழ்வருகின்றது. எமது நாட்டில் முதலாளித்துவ உற்பத்தியின் ஆரம்பம் பெருந்தோட்டங்களானாலும் பெருந்தோட்ட பயிர்செய்கை அறிமுகப்படுத்தி சுமார் 175 வருடங்களுக்கு பின்பும் எமது நாட்டில் பொருளாதார, சமூக அடிப்படையில் நோக்கும் போது மிகவும் கீழ்நிலையிலேயே இவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டிற்கு கீழேயும், எழுத்தறிவு குறைவாகவும், வேலையில்லா பிரச்சினை அதிகமாகவும், சிறுவர்கள் மரண வீதம் அதிகமாகவும், குடிபழக்கம் உட்பட்ட சமுதாய பிரச்சினைகளுக்கு இரையாகிய பெரும்பாலான மக்கள் இப்பகுதிகளிலேயே காணப்படுகின்றனர். இதேபோன்று ஆகக் குறைந்த கல்வி வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி காணப்படுவதும் இப்பகுதிகளிலாகும். இவ்வாறான மற்றும் ஏனைய வசதிகுறைவு காரணங்களினால் சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்கள் அதிகரிக்கப்பட்டு ஒப்பீட்டளவில் நடமாடும் மனித எலும்பு கூடுகள் அதிகமாக காணப்படும் நிலை இப்பகுதிகளிலேயே காணப்படுகின்றது. தோட்டங்களில் நிலையற்ற தொழில் வாய்ப்புகள், குறைந்த வருமானம், கீழ் மட்டத்திலான சமூக அந்தஸ்து , தமது பெற்றோர்கள், பாட்டன் முப்பாட்டன்கள் கட்டிய செக்குக் கல்லில் தம்மையும் கட்டிக்கொள்வதால் பலன் கிடைக்கப்போவதில்லை என்பது இன்றைக்கு இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களுக்கு முன்பு தோட்டப்புற இளைஞர்கள் உணர்ந்தனர். கையடக்க தொலைபேசி பாவனை அதிகரிப்பு, யுத்தம் முடிவடைந்ததால் கைதுசெய்தல் குறைவிலா ஓரளவு சுதந்திரமாக கொழும்புக்கு வருவதற்கான சந்தர்ப்பம், வெளிஇடங்களில் வசிக்கும் உற்றார் உறவினர்களை சந்திப்பதற்குள்ள சந்தர்ப்பங்கள் அதிகரித்தல் போன்ற காரணங்களினால் ஆரம்பத்தில் தமது வாழ்க்கையை தேயிலைச் செடிக்கு உரமாகும் தலைவிதியை முறியடித்து




கொண்டு இவ் இளைஞர்கள் கொழும்புக்கு வந்துள்ளனர். இன்று கொழும்பில் காணப்படும் ஹோட்டல்களில், சேர்விஸ் சென்றர்களில், கட்டிட பொருட்கள் விற்பனை நிலயங்கள் மற்றும் கடைகளில் ஓரங்கட்டிய தொழில்களே மலையக இளைஞர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. வியாபார உரிமையாளர்கள் இத்தொழிலாளர்கள் குறித்து பூரண திருப்தியாக கதைக்கின்றனர்.
"பாவம் ஒரு நாளுக்கு 15- 20 மணிதியாளங்கள் வேலை செய்கின்றனர். எமது இளைஞர்களைப்போன்ற சிறிய விடயங்களுக்கும் முகத்தை சுழித்துக்கொண்டு வேலையைவிட்டு ஓடிவிடமாட்டார்கள்" இக்கருத்தினை நீர்கொழும்பு வியாபாரி ஒருவர் எனக்கு தெரிவித்தார்.
தோட்டப்புறங்களிலிருந்து ராஜேஸ்கள் போன்றோர் கொழும்புக்கு வருவது வாழ்க்கையை வெற்றிகொள்வதற்காகும். எனவே தமது இளமைக் காலத்தை தேயிலைச் செடிக்கு இரையாக்கி ஓர் சொச்சத்தை வருமானமாக எடுக்கும் தலைவிதியிலிருந்து மீள இவ் இளைஞர்கள் முயற்சிக்கின்றனர். திரும்பி தங்கள் ஊருக்கு செல்தல், மாற்றுவழிகள், வேறு விதமாக உழைக்கும் வழிகள் அவர்களுக்கிடையாது இதேபோன்று கொழும்பில் அல்லது வேறு இடங்களில் அரசியல் அல்லது சமூக அதிகாரம் உள்ள பிரிவினராக இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு அரசியல், சமூக அதிகாரமுள்ள உற்றார் உரவினர்களும் இல்லை. மறுபுறம் கொழும்பில் கூட கலாச்சார ரீதியாக, சில சமயங்களில் கல்வி ரீதியாகவும் கீழ்மட்டத்திலேயே வைத்துள்ளனர். இதற்கு புரிம்பாக இவர்கள் தமிழர்களான படியால் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மறுபுறம் இவர்கள் பணிபுரியும் இடங்களில் தொழிற் சங்கங்கள் இயங்குவது இல்லை. தொழிலாளர்களுக்கு இடையில் பழமை அல்லது இன அடிப்படையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி அவற்றினூடாக வாட்டி வேலைவாங்குகின்றனர். எனவே இவ் இளைஞர்கள் கடை உரிமையாளர்களின் மனதை பிடிப்பதற்காக ஒருநாளில் சுமார் 15 மணித்தியாளங்கள் வேலைசெய்கின்றனர்.
இவர்களுள் உயர்தரம் சித்தியடைந்த, உயர்தரம் வரை கல்விகற்ற அல்லது வேறு கல்வி பயிற்சிகளை கற்றவர்கள் உள்ளனர். வடக்கில் அல்லது தெற்கில் இதே கல்வி தகமையுள்ள சிங்கள அல்லது தமிழ் இளைஞர்களைவிட ஓரங்கட்டப்பட்ட வேலைவாய்ப்புகளில் இவர்கள் ஈடுவடுவதும், ஈடுபடுத்தப்படுத்தும் நிலயே உருவாகியுள்ளது. மலையகத்தில் தேயிலைச் செடிக்கு இரையாகவிருந்த வாழ்க்கையை கொழும்பு நகரத்தில் அசுத்தமான இருண்ட ஹோட்டல்களின் மூலை முடுக்கில், வாகன சுத்தப்படுத்தும் அல்லது திருத்தும் நிலயங்களில், இவர்களின் வாழ்க்கையை இத்துப்போகவிடும் தற்போதைய சமுதாய முறையும், ஆட்சியையும் மலையக ராஜேஸ்களுக்கு உரித்தாக்கியுள்ளது. இவர்களின் தலைவிதியை மாற்றியமைக்க வேண்டாமா? கொத்து ரொட்டி தட்டுடன் போராடும் ராஜேஸ்களை காணும் எனக்கு இவ்வாறு தோன்றியது. ஏனென்றால் இவர்கள் தங்கள் பெற்றோர்களைவிட அறிவுள்ளவர்கள், சமுதாய அனுபவமுள்ளவர்கள். இருந்து நின்று கொத்துத் தட்டிலிருந்து மேலேழும்பும் தீச்சுவாலையைப் போல் நாமும் சுடர்விட்டெரிந்து போராடுவோம்.
"நாம் எமது பெற்றோர்களைவிட நன்றாக போராடுவோம்! எமீது பிள்ளைகள் எம்மைவிட நன்றாக போராடுவார்கள். அவர்கள் வெற்றி ஈட்டுவதும் நிச்சயமாகும்."
"லெனின்"

# முதலாளித்துவ வர்க்க... தேசப்பற்றின் எல்லை

பிரான்ஸில் தொழிலாளர் வர்க்க போராட்டங்கள் மேலெழும்பியதால் 1849ல் முடிவுற்ற பிரான்ஸ் மாமன்னர் லூவி பொனபாட்டின் ஆட்சியில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகித்த மாமன்னரின் சகோதரரான சார்ள்ஸ் மோனியும் இன்னுமோர் முதலாளித்துவ இராஜதந்திரியான பியுகாட்டும் பிரான்ஸின் வர்க்க போராட்டங்கள் குறித்து பறிமாறிக்கொண்ட கடிதங்களினால் எடுக்கப்பட்ட இரு குறிப்புகள்.
மார்ஷல் பியுனாட் நெப்போலியனின் சகோதரனுக்கு அனுப்பிய கடிதத்தில்,
□ளந்தளவு கொடூரமான பலமான மிருகக் கூட்டம்? இவர்களை இவ்வளவு கொடூரமாக வளர்ப்பதற்கு கடவுளால் இவர்களது பெற்றோர்களுக்கு அனுமதி வழங்கிது ஏன்?
1849 - ஏப்ரல் 07

" நெப்போலியனின் சகோதரனால் மார்ஷல் பியுனாட்டுக்கு, அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அளவுக்கு சோஷலிசம் வளர்ச்சியை எட்டியுள்ளது. நாம் செய்ய வேண்டியது, எமது உடை அணிகளை பொதிகட்டுதலும், ஓர் சிவில் யுத்தத்தை மூட்டி கொசாக்குகள் (ரஷ்யர்கள்) வந்து எம்மை காப்பற்றிக் கொள்வதற்கு கடவுளை பிரார்திப்பது மட்டுமேயாகும். நான் இந்த வசனங்களை எழுதும் போது எனக்கு சிரிப்பு வந்தது. இவ் வசனங்கள் உங்கள் மனதில் எமது இனத்தின் அபிமானத்தை குறித்த உணர்வுகளை கோபமூட்டும் என்று நினைக்கிறேன். ஆனாலும் என்னை நம்புங்கள். நீங்கள் சோஷலிசவாதியை நேரடியாக காண்பதற்கு பதிலாக கொசாக் ஒருவரை காண்பதற்கு விரும்ப வேண்டும். எனது தேசப்பற்றின் எல்லை இதுவே "
1849




தலைவிதியா,?
அறியாமையா ?
இல்லை..!
இல்லவேயில்லை.
தூக்கியெறியப்பட
வேண்டியது
மேல்தட்டு
சமூதாயத்தை
மட்டுமல்ல,
அறியாமையையும்தான்.
இது எமது
கட்டாய கடமைகளில்
ஒன்று.
அடிமை
நிலையை
அறுத்தெறிய
காலத்தை
ஆயுதமாக்குவோம்.
அறியாமையை
அறிவாக்குவோம்,
தலைவிதியை
தன்னம்பிக்கை
ஆக்குவோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல வெற்றிகளை பெற்றுத்தந்த ஜே.வி.பி தலைவரின் சுவீடன் பயணம்..!







சுவீடன் முதலாளித்துவ வள்ர்ச்சியில் உச்சவரம்பை எட்டியுள்ள நாடாகும். ஆனால் பலர் தெரியாத விடயம் என்னவெனறால் அந்நாட்டு இடதுசாரி இயக்கத்டதிற்கு நூறு வருட வரலாறு இருக்கிறதென்பதாகும். சுவீடன் நாட்டு இடதுசாரி கட்சி 1917ல் ஆரம்பிக்கப்பட்டதும்,அது ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரையில் மார்க்சிஸ் லெனினிஸ நிலைப்பாட்டிலிருந்து செயற்பட்டிருக்கிறது. முதலாளித்துவ அபிவிருத்தி உச்சநிலை அடைந்த ஒரு நாட்டில் இடதுசாரி இயக்கமொன்று தமது சித்தாந்த நிலைப்பாட்டிலிருந்து நழுவாது பாதுக்காப்பதென்பது இலகுவான விடயமல்ல. ஆனால் இறுதி வெற்றி தொலைதூரத்தில் கூட காணக்கிடைக்காதப்போதும் கூட அவர்கள் சமூகத்தில் மார்க்ஸ் லெனினிஸ நிலைப்பாட்டை திடமாக உறுதிப்படுத்தி இலட்சிய செங்கொடிகளை அசைத்த வண்ணம் முன்நோக்கி நகர்கின்றனர்.

சுவீடன் இடதுசாரிக்கட்சியின் மாநாடு கடந்த 7ம் திகதி நடைபெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்கவும் அம்மாநாட்டிற்கு அழைக்கப்படடிருந்தார்.

சுவீடன் இடதுசாரிக்கட்சியின் புதிய தலைவர் தோழர் யோனஸ் அவர்களுடன் நடத்திய சந்திப்பில் இரண்டு கட்சிகளுக்கிடையிலான உறவை பலப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. மேலும் அம்மாநாட்டிற்கு வருகைத்தந்திருந்த ஏனைய நாட்டு இடதுசாரிக் கட்சிகளுடனும் உறவை பலப்படுத்திக் கொள்வதற்கும் தோழர் சோமவன்சவினால் முடியுமாயிருந்தது. சுவீடன் இடதுசாரிக் கட்சியின் வெளிநாட்டு பணிகளுக்கான பொறுப்பாளர் ஆன் மாகரன் மற்றும் மூடி எப்ரெட் தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச செயலாளர் கீரிஸ் மதலிப்கோ மாலி நாட்டு சோசலிஷக் கட்சியின் உமார் மரிக்கோ ருவண்டா ஐக்கிய ஜனநாயக சக்தியின் பிரதான செயலாளர் டோன் பெப்டிஸ்மர் ராபஹிசி ஆகயோருடன் பேச்சுவார்த்தையை நடத்தி சர்வதேச சகோதரத்துவத்திற்கு பாலம் அமைக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்ணணியால் தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் தென்னாசிய கம்யூனிஷ்ட் கட்சி இடதுசாரிக் கட்சிகள் ஏகாதிப்பத்திய எதிர்ப்பு கடசிகளின் ஒன்றிணைவு பற்றிய கருத்துக்கு அக்கட்சி தலைவர்களிடமிருந்து பெறும் வரவேற்புக்கிடைத்தமை விஷேடம்சமாகும். சுவீடன் இடதுசாரிக் கட்சியின் தோழி ஆன் மாரக்கரேன் இலங்கையில் சிங்கள,தமிழ்,முஸ்லிம் பெண்களின் சக்தியொன்றை கடடியெழுப்புவதற்கு அதிஉயரிய பங்களிப்பினை பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேச வாதியாக முன்வந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

# தெபரவெவ மாநாடும் சந்தர்ப்பவாதத்தின் தோல்வியும்



சந்தர்ப்பவாதிகள் மற்றும் சதிகார கும்பல்களின் அனுபவமானது உலக இடதுசாரி இயக்கத்திற்கு பதியதோர் விடயமல்ல. உலக இடதுசாரி இயக்கத்தைப் போன்றே, மக்கள் விடுதலை முன்னணிக்கும் அது ஒரு புதிய விடயமல்ல. தனது வரலாறு முழுவதிலும் இடைக்கிடையே அப்படியான அனுபவங்களின் தளராத சக்தி கட்சிக்கு கிடைத்திருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் தனிநபர்களை கேந்திரமாகக் கொண்டும், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அவசரமயத்துடனும், தீவிர இடதுசாரி, மற்றும் வலதுசாரி போன்ற பல்வேறு வடிவங்களில் சந்தர்ப்பவாதிகளும் சதிகார கும்பலும் தோற்றம் பெற்றிருக்கிறது. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மக்கள் விடுதலை முன்னணியால் தீர்க்கமான முறையில அப்போக்கு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தடவையும் சந்தாப்பவாதிகளின் "மார்கட்டிங் புரொஜக்ட்"எவ்வளவு பெரிதானாலும் நேர்மையான புரட்சிவாதிகள் அடிமட்டத்திலிருந்து அசுர பலத்தோடு அணிதிரண்டு கட்சியை பாதுகாத்தனர். இறுதியாக கோஷ்டிவாதிகளின் இடிபாடுகளுடன் முடிவுக்கு வரும் சந்தர்ப்பமாக, கட்சியின் விஷேட மாநாடு 2012 ஜனவரி 01ம் திகதி திஸ்ஸமாரமை தெபரவெவ பொதுவிளையாட்டு மைதானத்தில் நடத்தியத மூலமாகும்.

எப்படியாயினும் சந்தர்ப்பவாதிகள் மாநாட்டை குழப்புவதற்கு கடும் முயற்ச்சிகளை மேற்கொண்டிருந்தனர். மாநாடு தெபவெவையில் நடத்தியது கூட அர்களின் சீற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தது. தூரம் அதிகமென்று ஊடகங்கள் வாயிலாக உளறியதிலிருந்து மநாட்டிற்கு நீதிமன்றத்தின் மூலமாக தடை உத்தரவை கேட்டு நீதிமன்றத்திடம் கெஞ்சினர். நீதிமன்றத்தில் தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் எஞ்சியிருந்தோ மாநாட்டை நிராகரிக்கும்' முணுமுணுப்பு மட்மேயாகும்.

ஆயிரக்கணக்கிலான மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்களின் இதயத்தில் சுமந்திருந்த உற்சாகத்துடன், நாடு முழுவதிலும் உலகம் பூராவிலும் உள்ள இலட்சக்கணக்கான இலங்கையர்களின் வாழ்த்தக்களோடு ஜனவரி முதலாம் திகதி தெபரவெவ மாநாடு வெற்றி முரசு முழங்கியது. முதலாளித்து சமூக பொருளாதார அரசியல் முறையை வீழ்த்திவிட்டு சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கான பாரிய மக்கள் சக்தியை தோற்கடிக்க கூடிய யாரும் இந்த உலகத்தில் பிறக்கவில்லை.

# 'சகோதரத்துவத்தின் மக்கள் அரண்' வெற்றியுடன் முன்நோக்கி...




மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்களான தோழர்கள் சுனில் ஹந்துனெத்தி மற்றும் இராமலிங்கம் சந்திரசேகர் இணை அழைப்பாளர்களாக கொண்டுள்ள , சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பு இத்தினங்களில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மக்களை தெளிவுபடுத்தும் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது.

அத்தெளிவுபடுத்தலின் முதலாம் கட்டமாக கடந்த 23ம் திகதி வவுனியா நகரத்திலும், அடுத்து 28ம் திகதி மட்டக்களப்பிலும் துண்டு பிரசுர விநியோக இயக்கத்தை நடத்தியது. வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதில் தோல்வி கண்டுள்ள மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தையும் அதற்கு பிராந்திய மட்டத்தில் அழுத்தம் கொடுத்து வரும் இந்தியா மேற்கொள்ளும் கபட நாடகம் பற்றியும் மக்களை தெளிவுபடுத்தி மிகவும் கஷ்டமான நிலையிலும் தமது வாழ்வை கொண்டுச் செல்லும் மக்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுக் கொடுக்கும்படி வலியறுத்தி நிற்கிறது. 23 ம் திகதி வவுனியாவில் இடம்பெற்ற துண்டு பிரசுர வினியோகத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. ஆனாலும் தோழர் சந்திரசேகர் சுனில் ஹந்துன்நெத்தியைச் சூழ உளவுப் படையினறும் சீஐடியினறும் சூழ்ந்த வண்ணமேயிருந்தனர்.பாதுகாப்பு படையினரின் இந்த தடைகளையும் மீறி துண்டு பிரசுரங்களை பெற்றுக் கொண்ட தமிழ் மக்கள் நன்கு வாசித்துப் பார்ப்பதையும் காணக்கூடியதாயிருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களையும் பத்திஜீவிகளையும் சந்திப்பதற்கு 2011 மே மாதம் சென்றிருந்த சுனில் ஹந்துன் னெத்தி உளவுப் பிரிவினரால் கடுமையாக தாக்கப்பட்டிருந்ததார். அதுபோன்ற எப்படியான தடைகள் அச்சுறுத்தல்கள் வந்தாலும் மக்கள் விடுதலை முன்னணி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் அதேபோன்று அவர்களின் உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் பணிக்கு பின்வாங்காது தைரியமாக தோல்கொடுக்கும் . அதற்காக முன்நோக்கியே பயணிக்குமே தவிர பின்வாங்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4ம் பக்கத் தொடர் டிவுவே..**

ஒற்றுமையின்மையை உக்கிரடயைச் செய்தல் சமத்துவமின்மையை அதிகரித்து உழைக்கும் மக்கள் வர்க்கத்தை இனவாத அடிப்படையில் பிரித்து துண்டாடும் திசையை நோக்கியதாகும். பாட்டாளி வர்க்கத்தின் தீர்வு தேசிய ஒற்றுமை சமத்துவம் வர்க்க ரீதியாக மக்களை ஒன்றிணைக்கின்ற வர்க்கத்தை பலப்படுத்துகின்ற நோக்த்துடனானதாகும். இந்த சரளமான மாற்றத்தை விளங்கிக் கொள்ள முடியாத வர்க்க கண்ணோட்டத்தில் தேசியப் பிரச்சினையை விளங்கிக்கொள்ள முடியுர்த புத்தக புழுக்கள் சிறு முவலாளித்துவ போலி இடது கும்பலகளுடன் அணிதிரண்டிருக்கும் கனவான்கள் வெட்கமின்றி ஏகாதிபத்தியதினதும் முதலாளித்துவ வாதிகளினதும் இந்திய மேலாதிக்கவாதிகளினதும் போலியான தீர்வின் பின்னால் அணிதிரண்டுள்ளனர். அதிகாரப்பகிர்வு பற்றி உரத்து பேசுகின்றனர். இவ்வாறானவர்களின் நோக்கமும் தேவையும் தேசியப் பிரச்சினையினால் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கான தீர்வல்ல தேசியப் பிரச்சினையை நிர்மாணித்த முதலாளி வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் தேவைகளை பிரதிநிதித்துவம் செய்யும் தீர்வாகும் .முதலாளித்துவத்தினுல் அதிகாரத்தை எப்படி பகிர்ந்தாலும் எவ்வளவு பகிர்ந்தாலும் அது மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. அது முதலாளி வர்க்க ஆட்சியாளர்களுக்கே கிடைக்கும். அதிகாரப் பகிர்வின் மூலம் பிரச்சினைக்கு தீர்வல்ல எனபது அதனாலாகும்.

### ராஜபக்ஸ ஆட்சியின் இரட்டை வேடம்

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வில்லாத ராஜபக்ஷ ஆட்சியும் அதன் பங்காளிகளும் இது தொடர்பாக அவர்கள் இரட்டை வேடத்ததை தரித்துள்ளனர். இந்த இரட்டை வேடம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. ஒருபுறத்தில் அதிகாரத்தை கைபற்றுவதற்கான வாக்குகளைப் பெறுவதற்காக சிங்கள இனவாதத்தை திருப்பதி படுத்துகின்ற அதற்கேற்ப கருத்துகளை தெரிவிக்கின்ற ராஜபக்ஷ ஆட்சி மறுபுத்தில் ஏகாதிபத்தியவாதிகளினதும் இந்தியாவினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்பட்டு பிரிவினைவாதத்தை போசித்து வருகின்றனர். கிருஷ்ணாவுக்கு 13க்கு அப்பால் செல்லும் தீர்வுக்கு உறுதியளித்த அரசாங்கம் அதை கிருஷ்ணா தனது வாயால் வெளிபடுத்.தும் வரையில் அமைதியாய் இருந்துவிட்டு அது வெளியானதன் பின்னர் ஏற்படும் பாதிப்பினை மூடி மறைப்பதற்காக பொய்யான கதைகளை கூறிவருதும் பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்து பிரச்சினையிலிருந்து ஒதுங்கி நிற்பதும் கபடத்தனமேயாகும். அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் தேசப்பற்று அமைச்சர்களும் தமக்கு தெரியாது எங்களுக்கு சொல்லவில்லை தற்போது ஒன்றும் கூறமுடியாது போன்ற கதைகளை கூறிவருவது உள்ளடக்கத்திலும் உருவத்திலும் காணப்படும இந்த தெடர்புகளினாலாகும். இதுவே இரட்டை வேடமாகும்.

### அரசாங்கத்தின் உண்மையான பொறுப்பு

இந்திய வெளிநாட்டமைச்சர் கிருஷ்ணாவுக்கு 13க்கும் அப்பால் வழங்குவதாக வாக்குறுதி அளித்த அரசாங்கம், 13க்கும் அப்பால் கோரிநிற்கும் இந்தியாவும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளின் முன்னால் குருடு, செவிடு, ஊமைகளாக காணப்படுகின்றனர் வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக் கூட இன்னமும் அரசாங்கம் முனனெடுக்க வில்லை. விசேடமாக வடக்கு மக்களின் எரியும் பிரச்சினையாக உள்ள இடம்பெயர்ந்தோரின்
மீள்குடியேற்றம், நிலமற்றவர்களுக்கு நிலம்வழங்குதல், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் போனவர்கசளின் பிரச்சினைக்கு தீர்வு. இவற்றுக்கு அப்பால் வடக்கில் நிலவும் இராணுவ ஆட்சிக்கு முடிவுகட்டி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தல். ஏனைய அத்தியாவசிய தேவைகளான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் நிர்வாக ரீதியான தீர்த்துவைத்தல் போன்ற அத்தியாவசிய பிரச்சினை களையே கணக்கில எடுக்காத அரசாங்கம் கிருஷ்ணாவுக்கு 13க்கு அப்பாலான தீர்வுக்கு உறுதியளித்துள்ளது. இதிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடிய உண்மைதான், முதலாளித்துவ
முறைமையினுள் தேசியப் பிரச்சினைக்கு மட்டுமல்ல மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் கூட முதலாளித்துவ முறைமையும், முதலாளித்துவ அரசாங்கமும் தோல்வியை தழுவியுள்ளமைக்கு மேலதிக சான்றுகள் தேவையில்லை.

### டிவெலுசனுக்கு பதிலாக ரிவொலுசன்

தேசிய பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொள்ள இரண்டு வழிகள் இருப்பதாகவும் அது இரண்டு வர்க்கங்களை பிரதிநிதிப்படுத்துவதாகவும் இதற்க்கு முன்னர் நாம் குறிப்பிட்டுள்ளோம்.
தேசியப் பிரச்சினையில் முதலாளி வர்க்கத்திறக்கும், ஏகாதிபத்தியத்திறக்கும், இந்திய மேலாதிக்கவாதிகளுக்கும் பிரிவினை வாதத்திற்கும் இருப்பது ஒரே தீர்வாகும் .அது நாட்டையும் மக்களையும் இனவாத அடிப்படையில் பிளவுபடுத்த ஏற்புடையதன அதிகாரப் பகிர்வு முறைமையாகும். மக்களை துண்டாடுவதாகும் உழைக்கும் வர்க்கத்தை பிரிப்பதாகும். கருத்தியல்ரீதியாக வெளிப்பட்ட பிரிவினைவாதம் காலப்போக்கில் ஆயுதமயமானதன்
காரணம் மேல்கூறிய சக்திகளின் செயற்பாடுகளினாலாகும்.பிரிவினைவாத்தின் ஆயுத பலம் தோகடிக்க்பட்டு 3 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும் சமவாய்புள்ளவாகளாக கருதுவதில் தோல்வி கண்டுள்ளதன் காரணத்தினாலும் எகாதிபத்திய வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுவதினாலும் மீண்டும் பிரிவினைவாத அரசியல் வள்ச்சியடைந்து வருகிறது. அண்மையில் தமிழ் புத்திஜவிகளென கூறப்படும் சிலரால் வெளியிட்ட அறிக்கை கூறுவதாவது தனி நாட்டிற்கான போரட்டத்தை தொடந்து கொண்டுச் செல்ல வேண்டுமெவும் அதைவிடுத்து அதிகாரப் பகிர்வு யோசனையை ஏற்றுக்கொள்வதால் தனிநாட்டுப் போராட்டம் பலவீனமடையுமென்பதால் அப்படியான தீர்வினை ஏற்றுக்கொள்ள வேண்டாமென தமிழ் தேசிய கூட்டமைப்பை வலியறுத்தியுள்ளது. இப்போது ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை பொருட்படுத்தாது இருப்பதினால் தமிழ் மக்கள் பிரிவினைவாதத்தை நோக்கியே தள்ளுவதே நடைபெறும்.
சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் தேவைகளின் பக்கத்திலிருந்து சிந்தித்துப் பார்க்குபோது தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மக்களின் போரட்டம் பாட்டாளி வர்க்கத்தின் மூலமாக பிரச்சினையை தீர்க்கும் திசையை நோக்கியேயாகும். முதலாளி வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளினதும் தீர்வுத் திட்டத்திற்கு மாற்றாக பாட்டாளி வர்க்கத்தின் தீர்வின் அடிப்படையில் உரிமைளை வழங்குவதும் ஜனநாயகத்தை உறுதிபடுத்துவதுமாகும். எதேச்சதிகார மையப்படுதலுக்கோ எதேச்சதிகார அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக ஜனநாயகமையப்படுத்தலே பாட்டாளி வர்க்க தீர்வின் அடிப்படை சித்தாந்தமாகும. மக்களை பிரித்தல் துண்டாடுதல் மற்றும் தனிமைபடுத்தலக்குப் பதிலாக மக்களை ஒன்றுசேர்த்தல் ஐக்கியப்படுத்துவதே அதன் பிரதான நோக்கமாகும். இந்த யுகத்தில் அவ்வாறன குறிகோளின் அடிப்படையில் தீர்வினை வழங்குவதற்கு மட்டுமேயாகும். அதற்கு தேவைபடுவதெல்லாம் சிங்கள தமிழ் முஸ்லிம் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க ஒற்றுமையும் முதலாளித்துவத்திற்க்கு எதிரான போராட்டத்தின் மூலமாக சமூகப்புரட்சிக்கு செல்வதேயாகும் அதற்க்கிணங்க தேசியப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு அதிகாரப்பகிர்வு டிவொலூசன் மூலமாக அல்ல சமூகப் புரட்சியெனும் ரிவொலூசன் மூலமேயாகும். எனவேதான் முதலாளி வர்க்கத்தின் டிவொலூசனுக்கு எதிராக பாட்டாளி வர்க்கத்தின் ரிவொலூசனே மாற்றானதாக இருக்க முடியும். முதலாளி வர்க்கத்தின் டிவொலூசனுக்கு பதிலாக பாட்டாளி வர்க்கம் ரிவொலூசனை தெரிவு செய்யும் நாளில்தான் ஏகாதிபத்தியத்தின் தோல்வியும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் இனவாதத்தின் அழிவும் உறுதிசெய்யப்படும் அதேவேளை மக்கள்ன் வெற்றியும் சோஷலிசத்தின் வெற்றியும் தேசிய ஒற்றுமை உதயமாகும் சிறப்பான நாளாகும். எமது கடமை இதற்காக உழைப்பதேயாகும்.

---

**05 ம் பக்கத் தொடர் தரிசு..**

அதை அரசாங்கம் பொறுப்பேற்பதாகவும் செய்திகள் அடிப்படுகின்றன. அப்படி அரசாங்கம் பொறுப்பேற்கும் தோட்டங்களில் தேயிலையை அழித்து மாற்று பயிர் என்னும் திட்டத்துடன் தனியார் முதலாளிகளுக்கு விற்பதும், அதை தொழிலாளர்கள் எதிர்க்க முற்படும்போது அவர்களுக்கு தோட்டத்திலுள்ள காணிகளில் குறிப்பிட்டளவை பகிர்ந்தளிப்பது என்ற திட்டமாகும். பகிர்ந்தளிப்பது என்பது வெறும் கண்துடைப்பாகும். அதாவது கடந்த காலத்தில் கூறியதைப்போன்றே தற்போதும் கூறுகின்றனர். அதற்கு முன்னர் பார்க்கின்ற போது நீகு நிதியில் கடன் வழங்கி அமைக்கப்பட்ட வீடுகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பதை தொழிலாளர்கள் அவதானிக்க வேண்டும். தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டுமென கூவும் அமைச்சர்கள், மந்திரிமார்கள் தாம் காணிகளை வாழ்குவதற்கும் முண்டியடிக்ககின்றன. இதில் தொழிலாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும.

**12 ம் பக்கத் தொடர் அரசு..**

மக்கள் அடக்குமுறைக்குட்பட்டுள்ளனர். ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகின்றது.
இவ்வாறான நிர்வாகத்தை நீடித்துக்கொண்டிருப்பதன் மூலம் அவர்களின் சகவாழ்வு பாதிக்கப்படுகின்ற அதே வேலை பிரச்சினைகளுக்கான தீர்வுகலும் விலகிப் போகின்றன. இந்நிலைமைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு பயங்கரவாத புறச்சூழல் ஒன்றை ஏற்படுத்தி அதற்குள் அந்த மக்களை தள்ளிவிடவே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
மாறாக மாணவர்களின் போராட்டங்கள் மக்களது உரிமைக்கான ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான சூழ்ச்சிகளோ இல்லாவிட்டால் பயங்கரவாதத்தை தோற்றுவிழப்பதற்கான நடவடிக்கையோ அல்ல. அவ்வாறு கூறுவது தவறாகும் என்றார்.

---

**12 ம் பக்கத் தொடர் 13+**

ஏற்படுத்தும். எனவே,கிருஷ்ணா கூறிய வகையிலும் இலங்கை அரசு இணங்கிக்கொண்டதுமான 13 பிளஸ் குறித்து பகிரங்கப்படுத்த வேண்டும். அது மாத்திரமன்றி பிரச்சினைகள் இருப்பது தமிழ் மக்களுக்கே அன்றி இந்தியாவுக்கு அல்ல.

எனவே இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவோ அல்லது இந்தியாவை மகிழ்விப்பதற்கானதாகவோ தீர்வு அமையலாகாது. மாற்றாக தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு,கிழக்கைச் சேரந்த தமிழ் மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் அந்த மக்கள் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்வுகள் இருக்க வேண்டும் என்பதுதான் ஜே.வீ.பியின் நிலைப்பாடாகும்.

பாதிக்கப்பட்ட மக்கள் இன்று கேட்பதெல்லாம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்தி தருமாறும் கைது செய்யப்பட்ட சிறைகளில் இருக்கின்ற தமது உறவுகளை விடுதலை செயயுமாறும் மற்றும் கடத்தப்பட்டவர்களை,காணமல் போனவர்களைத்தேடித் தருமாறுமே கோருகின்றனர். இதனை பெற்றுக்கொடுக்க முற்பட வேண்டும். மீள்குடியேற்றம் என்பது முகாம்களில் இருந்த மக்களை பஸ்களிலும் லொறிகளிலும் ஏற்றிச்செனறு பிறிதொரு இடத்தில் இறக்கிவிடுகின்ற நிலையாக இருக்கின்றது. அந்த மக்களின் தொழில் வாய்ப்பு தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன.

மீட்கப்பட்ட பிரச்சினைகளின் இதுவரையில் சிவில் நிர்வாகம் உறுதிப்படுத்தவில்லை. இராணுவ மயமாகவே மீட்கப்பட்ட பிரதேசங்கள் காணப்படுகின்றன.இவ்வாறான பிரச்சினைகளுக்குத்தான் முதலில் தீர்வுக்காணப்படவேண்டும். இதனை விடுத்து பேச்சுவார்த்தை என்றும் இந்தியாவின் உதவியென்றும் கூறி இங்கு காலம் கடத்தப்படுவது மாத்திரமல்லாது முன்னெடுக்கப் படுகின்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களை மேலும் சிக்கலுக்குள்ளேயே தள்ளும்.

இந்தியாவின் இலங்கை மீதான அழுத்தம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கம் எவ்வாறு இந்தியாவின் பிடிக்குள் இருந்ததோ அதே போன்றுதான் இன்றைய அரசாங்கமும் காணப்படுகின்றது. இந்தியாவை பொறுத்தவரையில் வடக்கு,கிழக்கின் காணிகளை அபகரிப்பதே அதன் நோக்கமாகும். அதற்கு இலங்கை அரசும் துணை போகின்றது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு என்னத்தேவை என்பதை இலங்கை அரசு மட்டுமல்ல தமிழத் தேசிய கூட்டமைப்பு மற்றும் இந்தியா ஆகிய தரப்புக்களும் நன்கு உணர்ந்திருக்கின்றன. ஆனால் உணரப்பட்ட விடயங்கள் குறித்து அக்கறை இன்றி இல்லாதிருக்கின்றன.

சரவகட்சி குழுவை அமைத்த அரசாங்கம்தான் இன்று தெரிவுக்குழு குறித்து பேசுகின்றது. இதன் மூலம் தீர்வு சாத்தியமா என்பது குறித்து அரசு மக்களுக்கு கூறவேண்டும்.

கடந்த பொது தேர்தலின் போது சுதந்திரக் கடசியின் செயலாளரான அமைச்சர் மைத்திரிப்பால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் தமது அரசாங்கத்திடம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு இருப்பதாகவும் தேர்தல் முடிந்தவுடன் அதனை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் கூறினார்கள். ஆனால் இதுவரையில் நடக்கவில்லை. இன்நிலையில் தெரிவுக்குழு விடயத்தை நம்பமுடியாதிருக்கின்றது என்றார்.

**முன் பக்கத் தொடா சட்ட...**

அதன் காரணமாக பணம் குவிந்து இருக்கும் இடங்களை கொள்ளையடிக்க எண்ணுவது விசித்திரமான ஒன்றலல். இலங்கையில் பெருந்தொகையான பணம் குவிந்தீரப்பது EPE, ETF நிதியத்தில் மட்டுமேயாகும். அரசாங்கம் இப்போது முயற்சித்திருப்பது இந்தப்பணத்தின் மூலமாக தமது நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காகவாகும்.
ஜனாதிபதி கடந்த காலத்தில் தேசத்தின் பிள்ளைகளின் பெருமைக்குரிய தந்தை என்பதற்குப்பதிலாக உழைக்கும் மக்களின் சொற்ப பணத்தையும் போதைக்கும், சூதாட்டத்திற்கும் விரயமாக்கிவிட்டு வெறும் கையோடு வீட்டுக்குள் நுழைந்து உண்டியலை உடைத்து பணத்தை எடுத்து வீன்விரயம் செய்யும் சுயநலமிக்க தந்தையாகவே காணப்படுகிறார்.
முதலாளித்துவ முறையினுள் பின்தங்கிய பொருளாதாரத்துனுள் ராஜபக்ஷ போன்ற ஆட்சியாளர்களிடம் வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாதென்பதால் நாட்டு வளங்களை நாசமாக்கிக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் கைவைத்துள்ள ராஜபக்ஷ அரசாங்கத்தையும் முதலாளித்துவ முறையையும் ஒரே நேரத்தில் தோற்கடிக்கும் அரசியல் பயணத்தில் மக்கள் இணைந்துக்கொள்ள வேண்டிய காலம் கனிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சோஷலிஸ கியூபாவின் மருத்துவ சாதனை!

**ஹைட்டியில் நடைபெற்ற இயற்கைப் பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றிய அவர்கள் தான் உண்மையான நாயகர்கள். தன் நாட்டுக்கு மிக அருகிலேயே நடைபெற்ற இந்த மனிதப் பேரழிவிலிருந்து மக்களைக் காப்பது தான் எங்கள் கடமை என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உறுதியேற்ற போதிலும், அவர்களைக் காப்பாற்றியது என்னவோ அமெரிக்கா எதிரியாக கருதும் கியூபா தான்.**



நிழநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஹைட்டி

### உண்மையை மூடிமறைக்கும் முதலாளித்துவம்!

ஆம் கியூபா மருத்துவர்களும், செவிலியர்களும் ஆற்றிய பணிகள் தான் வட அமெரிக்காவின் உண்மையான முகத்தை மக்களுக்குத் தோலுரித்துக் காட்டியது என்றால் அது மிகையன்று. சுமார் 1,200 கியூபார்களைக் கொண்ட ஒரு மருத்துவப் படையணி நிலநடுக்கத்தாலும், காலராவாலும் பாதிக்கப்பட்ட ஹைட்டி முழுக்க பணியாற்றி வருகின்றார்கள். முன்னாள் கூப அதிபர், பிடல் காஸ்ட்ரோவின் பன்னாட்டு மருத்துவ திட்டம் சோசலிச கியூபா விற்கு பல நண்பர்களை உருவாக்கித் தந்திருக்கின்றது. ஆனால் உலக அளவில் இந்தத் திட்டத்திற்கான அங்கீகாரம் என்பது மிகமிக சிறிய அளவிலேயே உள்ளது என்பது நகைமுரணாகும்.

ஏறத்தாழ 2,50,000 பேர் உயிரிழந்து, 15 இலட்சத்திற்கும் மேலான மக்கள் வீடிழந்த ஹைட்டி நிலநடுக்கம் தோற்றுவித்த இன்னல்களைச் சரி செய்து மக்களைக் காப்பாற்றி வருவது பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்கள் தான் என நீங்கள் எண்ணியிருந்தால் உங்களை ஆண்டவர்" மன்னிப்பாராக.

1998லிருந்து 350 கியூபா மருத்துவ ஊழியர்கள் ஹைட்டி மக்களுக்கு மருத்துவம் செய்து வருகின்றார்கள். நிலநடுக்கம் ஏற்பட்ட உடனே இந்த 350 பேர் கொண்ட மருத்துவக்குழு நிவாரண வேலையில் இறங்கியது. வட அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்து அரசிடமிருந்தும் உதவிகள் வரும் என்று உலக ஊடகங்கள் கூவிக் கொண்டிருந்த வேளையில், நூற்றுக்கும் மேற்பட்ட கூப மருத்துவர்களும், செவிலியர்களும் எந்த ஒரு சிறு அறிவிப்பும் இன்றி ஹைட்டியில் வந்திறங்கினார்கள்.

பெரும்பாலான நாடுகளின் உதவிக்குழுக்கள் வழமை போலவே கியூபா மருத்துவர்கள் குழுவையும், எல்லையில்லா மருத்துவர்கள் குழுவையும் தனியே விட்டு விட்டு, இரண்டு மாதங்களில் பெட்டியைக் கட்டிக் கொண்டு தங்கள் நாடுகளுக்குப் பயணமானார்கள். கூப மருத்துவ குழுவும், எல்லையில்லா மருத்துவர்கள் குழுவும் தான் ஏழ்மையில் வாடும் மேற்கிந்திய தீவு மக்களுக்கு மருத்துவம் அளிக்கும் முதன்மையான அமைப்புகளாகும்.

2010 அக்டோபரில் இருந்து இன்றுவரை 30,000க்கும் அதிகமான காலரா நோயாளிகளை 40 மருத்துவ மையங்களில் உள்ள கியூப மருத்துவக்குழு குணப்படுத்தியுள்ளது என தற்போது வெளியாகியிருக்கும் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. ஹைட்டியில் உள்ள 40விழுக்காடு காலரா நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ள கூப மருத்துவர்கள் குழுதான் ஹைத்தியிலுள்ள மிகப்பெரிய வெளிநாட்டு மருத்துவக்குழு ஆகும். இது மட்டுமன்றி, அண்மையில் ஹைட்டியில் நூற்றுக்கும் அதிகமான மக்கள் ஒரு குறிப்பிட்ட நோயினால் மரணமடைவதை அறிந்ததும் கியூபாவின் இயற்கைப்பேரழிவு, சிறந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்ட அவசர காலக் குழுக்களில் ஒன்றான ஹென்றி ரீவ் மருத்துவப் படையணியும் ஹைட்டிக்கு வந்து சேர்ந்தது.

### மருத்துவ பயிற்சி இலவசம்!



கியூப மருத்துவ பயிற்சி முகாம்

கியூபாவில் மிகவும் முன்னேறிய நிலையில் உள்ள மருத்துவ மையம் Escuela Latinoamericana de Medicina en cuba (Elam) வில் 1998லிருந்து 550 ஹைட்டி மருத்துவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளித்துள்ளது. மேலும் பணம் இல்லாத காரணத்தினால் தனது நாட்டில் மருத்துவம் படிக்க முடியாத திறமையான 400 மாணவர்கள் இன்று கியூபாவில் மிகமிக குறைந்த செலவில் மருத்துவப் படிப்பு பயின்று வருகின்றார்கள்.

கனடாவின் டல்ஹோசி பல்கலைக்கழகத்தில் இலத்தின் அமெரிக்க கற்றலுக்கான விரிவுரையாளர் சான்கிர்க் கியூபாவின் பன்னாட்டு மருத்துவக்குழுக்களைப் பற்றி பகுப்பாய்வு (Research) செய்துள்ளார். அவர் கூறுகையில், "ஹைட்டி நிலநடுக்கத்தில் பெரும்பாலான மருத்துவப் பணிகளை கியூபா மருத்துவக்குழு மட்டுமே செய்துள்ளது. ஆனால் இதைப் பற்றி யாரும் வாய்திறக்காமல், இதை ஏதோ உலக ரகசியம் போன்று மறைத்து வைத்துள்ளது, உலக நாடுகள்."



பாதிக்கப்பட்ட ஹைட்டி மக்களுக்கு கியூபா வைத்தியகள் உதவுதல்

இது ஏதோ இன்று புதிதாக நடக்கும் ஒன்றல்ல. கியூப நாட்டிலிருந்து, நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சிலே நாட்டுக்கு 1960ல் ஒரு மருத்துவ படையணி சென்றதையும், 1963ல் அல்ஜீரியா நாட்டிற்கும் 50 பேர் கொண்ட மருத்துவக்குழு சென்ற தகவல்களும் உலகினால் மறைக்கப்பட்ட ஒன்று தான். புரட்சி நடந்து முடிந்த நான்கு ஆண்டுகளில் மேற் கூறிய நிகழ்வுகளை கியூபா நடத்தி காட்டியது. நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் (7,000) அமெரிக்காவை நோக்கி பறந்து கொண்டிருந்த காலம் இது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இது போன்று பல நாடுகளுக்கு பயணம் செய்யும் மருத்துவக் குழுக்கள் மூலமாக கியூபா நாட்டிற்கு பல நண்பர்கள் உலகம் முழுவதும் உருவாகியுள்ளனர். இதில் மிகவும் குறிப்பிடத்தக்க திட்டம் என்றால் "ஆப்பரேசன் அதிசயத்தை" கூறலாம். கியூபா விற்கு வெனிசுலா கொடுக்கும் எண்ணெய்க்குப் பதிலாக கியூபா கண் மருத்துவர்கள் வெனிசுலாவில் ஏழ்மையில் வாடும் கண் நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும் என்பதே அத்திட்டமாகும். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து 35 நாடுகளில் 18 இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் கண் தொடர்பான பிரச்சினைகள் கூப மருத்துவர்களால் களைய அவர்களுக்கு எல்லாம் கண் பார்வை மீளக்கிடைத்துள்ளது. இதில் 1967இல் சே குவேராவைக் கொன்ற பொலிவிய காவலாளியான மரியோ தெரனும் அடங்குவார் (அவரது கண் பார்வையையும் மீட்டுக் கொடுத்தது கியூபா மருத்துவக் குழுவே).

### கடமையை பிரளாத கியூபா!

கத்ரினா புயலுக்குப் பின்னர் பல வட அமெரிக்க மருத்துவர்களும் (முன்னாள் கியூபர்கள்) ஹென்றி ரீவ் மருத்துவப் படையணியில் சேர்ந்து கொண்டார்கள். இந்த மருத்துவப் படையணிதான் 2005இல் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு முதலில் சென்று மருத்துவ உதவி செய்தது. வழமை போலவே மற்ற எல்லா தொண்டு நிறுவனங்கள் கிளம்பிய பிறகும், ஆறு மாதங்கள் கழித்தே இவர்கள் நாடு திரும்பினார்கள்.

விரிவுரையாளர் கிர்க் மேலும் கூறுகையில், "உலக நாடுகளில் வாழும் மக்களுக்கு ஆதரவளிப்பது (Solidarity) என்ற கொள்கைக்காக மட்டுமில்லாமல், கியூபா அரசியலமைப்பில் உள்ள வறுமையில் வாடும் நாடுகளுக்கு தேவைப்படும் போது எல்லாம் உதவ வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டே இம்மருத்துவப் படையணிகள் உருவாக்கப்பட்டுள்ளன." "கியூபாவில் குறைந்த அளவு மட்டுமே ஊதியம் பெறும் இம்மருத்துவர்கள் இந்தக் குழுக்களுடன் பயணிப்பதன் மூலம் அதிகமான ஊதியம் கிட்டுவதுடன், தாங்கள் படித்த நோய்களைப் பற்றி மேலும் தெரிந்து கொண்டு, அதைத் தடுக்கும் வழிமுறைகளில் அவர்கள் ஈடுபடவும் உதவுகின்றது. அதிபர் பிடலின் முக்கியக் கொள்கையான இந்த மருத்துவக் குழுக்களினால் ஐக்கிய நாடுகள் சபையில் கியூபாவிற்கு ஆதரவாக வாக்குகளும் விழுந்துள்ளது".

### மருத்துவ சாதனை!

எல் சாவ்டார், மாலி, கிழக்கு திமோர் உற்பட 77 வறிய நாடுகளில் 5,000 கூப மருத்துவர்களும் (கியூபாவின் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கையில் இது மூன்றில் ஒரு பங்கு), 10,000க்கும் அதிகமான மருத்துவ ஊழியர்களும் வேலை செய்து வருகிறார்கள்.



ஹைட்டியை நொக்கி பயணிக்கும் கியூப மருத்துவ படையணி

இவ்வளவு மருத்துவர்கள் கியூபாவுக்கு வெளியே பணியாற்றி வந்த போதும்,கியூபாவில் 220 மக்களுக்குஒரு மருத்துவர் என்ற விகிதம் உள்ளது என்பதும், இதுதான் உலகிலேயே சிறந்த முதல் விகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தில் 370 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதமே இதற்கு அடுத்ததாகும்.

எங்கெல்லாம் கியூபா மருத்துவர்கள் அழைக்கப்படுகின்றார்களோ அந்தப் பகுதிகளில் எல்லாம் அவர்கள் நோயைத் தடுக்கும் வழிமுறைகளை செயல்படுத்தியும், வீடுகளுக்குச் சென்று மருத்துவம் செய்தும், குறிப்பாக பிரசவ கால பெண்களின் உடல்நிலையையும், குழந்தைகளின் உடல் நிலையையும் தொடர்ந்து கவனித்தும் வருகின்றார்கள். இந்த முறைகளின் மூலமாக "மிகப்பெரிய வித்தியாசத்தை" எல் சாவ்டார், கெளதமாலா, ஹோண்டு ராஸ் நாடுகள் கண்டுள்ளன. பிரசவகாலத்தில் குழந்தைகள் இறக்கும் விகிதம் குறைந்துள்ளது. குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களின் விழுக்காடு குறைந்தும் உள்ளது. மேலும் அந்தந்த நாடுகளில் இருக்கும் மருத்துவர்களுக்குத் தேவையான பயிற்சியையும் இந்தக் குழு அளிக்கின்றது எனசான் கிர்க் தனது பகுப்பாய்வின் மூலம் நிறுவியுள்ளார்.200 மக்களுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும், இவருக்கு உறுதுணையாக ஒரு செவிலியரும் இருப்பார்.

இந்தத் திட்டத்தின் மூலமாக கியூபா உலகில் எந்த நாடும் அடைய முடியாத பல்வேறு மருத்துவ முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

(நன்றி இணயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீ டன் இடதுசாரி கட்சி மாநாட்டில் ஜே வி பி தலைவர் தோழர் சோமவன்ச



கடந்த 6-9 ம் திகதிகளில் நடைபெற்ற சுவீடன் இடதுசாரி கட்சியின் 39வது கட்சி காங்கிரஸ ிற்கு அந்தக் கட்சியின் அழைப்பிற்றேப மக்கள் விடுதலை முன்ணனி தலைவர் வெளிவிவகார தொடர்பான செயலாளர் தோழர் சோமவங்ச அமரசிங்க கலந்துக்கொண்டாரகள்
இது ஜே வி பி தலைவரொருவர் சுவீடன் இடதுசாரி கடசிகள் மாநாட்டில் கலந்துக்கொண்ட முதலாவது சந்தர்ப்பமாக அமைவதோடு இலங்கையில் இடதுசாரி கட்சியாக சந்தர்ப்பம் கிடைத்திருத்தது ஜே வி பிக்கு மட்டுமே என்பது விஷேடம்சமாகும். தோழர் சோமவன்ச அமரசிங்க ஜனவாரி 7 8ம் திகதிகளில் அக்கட்சி காங்கிரஸ் உற்சவ நிகழக்கயில் கலந்துக் கொண்ட பிறகு காஙகிரஸில் உறையாற்ற வாய்ப்பும் கிடைத்ததும் மாநாடு முடிந்த பின்னர் சுவீடன் இடதுசாரி கட்சியின் பல தலைவர்களையும் சந்திதது பேச்சுவார்த்ததை நடத்தியுள்ளார். பல நாடுகளியிலருந்தும் இம் மாநாட்டிற்கு இடதுசாரி கடசி பிரதிநிதிகள் கலந்துக் கொண்டமை ஒரு விஷேடம்சமாகும்.

# பெண்களின் உரிமைகளை பாதுகாப்போம்!



பெண்கள் முகம் கோடுக்கும் பிரச்சினைகளுக்கு தற்போது நாம் வாழும் முதலாளித்துவ சமுதாயத்தில் தீர்வு எதனையும் எதிர்பார்க்ககூட முடியாது. எனவே பெண்களின் உரிமைகளை போராடி பெற்றாக வேண்டும். அதற்காக பெண்களை தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு தெளிவுபடுத்தும் மாநாடொன்றை 'உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு' கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்து கொண்டவர்களையும், அமைப்பின் தேசிய அமைப்பாளர் சரோஜினி போல்ராஜ் உரையாற்றுவதையுமே படத்தில் கான்கின்றீர்கள்

# அரசாங்கமே ஆயுத கலாச்சாரத்துக்கான சூழலை உருவாக்குகிறது

- ஜே.வி.பி குற்றச்சாட்டு-

புலிகளின் நடவடிக்கைகள் அனைத்தும் நந்திக்கடலுடன் நிறைவுக்கு வந்துவிட்டன. அத்தகைய நிலைமை மீண்டும் தோன்றாது என்பதே எமது நம்பிக்கையாகும். ஆனாலும் அரசாங்கமே மீண்டுமொரு ஆயுதக் கலாசாரத்துக்கான புறச்சூழலை உருவாக்கி வருகிறது என்று ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அநுரக்குமார திசாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

வடக்கில் இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்படுகின்ற வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் நான்காவது பரம்பரைக்கே கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. சர்வாதிகார ஆட்சியைக் கொண்டிருந்த நாடுகளுக்கும் தலைவர்களுக்கும் ஏற்பட்ட நிலைமை என்னவென்பதை அனைவரும் உணர வேண்டும் என்று அவர் கூறினார்.ம.வி.மு வின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உலகில் எந்தவொரு நாட்டிலும் மக்கள் வீதிக்கிறங்கியதால் ஆட்சி கவிழ்ந்துவிடவில்லை. அதே போல் ஆட்சியயைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டங்கள் தீட்டப்பட்டதாகவும் சரித்திரம் இல்லை, சர்வாதிகாரத்தின் காரணத்தினாலேயே ஆட்சி கவிழ்ப்புகள் ஏற்பட்டுவருகின்றன. இதனை புரிந்துக்கொள்ளாத அரசாங்கம் மக்கள் வீதிக்கு இறங்கியது ஆட்சியை கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் என கூறுமேயானால் அரசாங்கம் அச்சமடைந்து விட்டது என்பதே அர்த்தமாகும். மீண்டும் ஒரு பயஙகரவாதம், பிரிவினைவாதம் தோற்றம் பெறுமேயானால் அது அரசாங்கத்தின் செயற்பாடுகளினாலேயே இடம்பெறும்.

நாட்டில் இடம்பெற்றுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை காரணம் காட்டி பொய்யான கதைகளை கூறி புலி முத்திரையில்லாவிட்டால் வேறுவகையான முத்திரைகளை குத்தியிருக்கும் பிரச்சினைகளை மூடிமறைக்கவே அரசு முயற்சிக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கென வடக்கில் 50ஆயிரம் வீட்டுத்திட்டம் ஒன்று இந்தியாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதில் இதுவரையில் 450 வீடுகளே அமைக்கப்பட்டிருக்கின்றன. மிகுதியான வீடுகளை நிர்மானித்து நிறைவு செய்வதற்கு இன்னும் 100 வருடங்கள் கூட ஏற்படலாம். அதாவது இந்திய வீட்டுத்திட்டம் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் நான்காவது தலைமுறைக்கே கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது வடக்கில் ஜனநாயகம் இல்லை. மீட்கப்பட்ட பிரதேசங்கள் என்று கூறி அங்கு தற்போது இராணுவ நிர்வாகமே இடம்பெற்று வருகின்றது. சாதாரண மக்களுக்கான சிவில் நிர்வாகம் அங்கு இல்லை. அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் அப்பட்டமாக மறுக்கப்படுகின்றன, மீறப்படுகின்றன.அந்த மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. முழுமையான மீள் குடியேற்றம் இல்லை. மொத்தத்தில் அந்த

10ம் பக்கம் பார்க்க

# தேர்தல் சட்டத்திருத்தங்களுடன் நிறைவேற்று ஜனாதிபதிமுறையும் ஒழித்தாக வேண்டும்

--தோழர் அநுர குமார திசாநாயக--



விருப்புவாக்கு தேர்தல் முறைபற்றிய மக்களிடம் காணப்படும் எதிர்ப்புக்குள் மறைத்துக்கொண்டு உள்ளுராட்சி தேர்தல் சட்டத்ததை மழுங்கடிக்க அரசாஙகம் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் தற்போதைய அரசியல் கலாச்சாத்தின் சீரழிவு காரணமாக நிறைவேற்றுவதை தடுக்க முடியாதெனவும் தேர்தல் சட்டதிருத்த மசோதாவுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையையும் ஒழிக்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்ணனியின் பாராளுமன்ற குழு தலைவர் தோழர் அநுர திசாநாயக தெரிவித்தார். கடந்த 08ம் திகதி ஜே வி பியின் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகை மாநாட்டியே இதை குறிபிட்டா. மேலும் கருத்து தெரிவித்த தோழர் அநுர திசாநாயக்க விதிதாசார தேர்தல் முறையை 1977ல் அறிமுகப்டுத்திய திறந்த பொருளாதார கொள்கையுடனேயே இத் தேர்தல் முறையும் அறிமுகப்பதடதப்பட்டது அத்துடன் நிறைவேற் ஜனாதிபதி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேர்தல் முறையின் இரட்டை சகோதரன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியாகும் அதனால் ஒரு தேர்தல் முறையை திருத்தி மற்றயதை பாதுகாக்க முடியாது. அதனால் தேர்தல் சட்டம் திறுத்தம் செய்யும்போது நிறைவேற்று ஜனாதிபதிபதி முறையை ஒழிக்கும் நிபந்தனை கட்டாயமாக பிணைந்திருக்கிறது.

குறைத்தபட்சம் வாக்காளர்களின் கருத்தை பிரதிநிதி செய்யம் பலவீனமான விகிதாசார தேர்தல் முறை மேலும் நெருக்கடிகளை உக்கிரமடைய செய்கின்ற தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதல்ல. மக்கள் கருத்தை குறைந்தப்பச்சமாவது உறுதிப்படுத்தப்படும். நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கு அடிப்பணியாத பாராளுமன்றமோ உள்ளுராட்சி நிறுவனங்களின் ஜனநாயகத்தை பாதிகக்கும் நிலமையை அறிமுகப்படுத்துவதாகும். குறைந்த மட்டத்தலாவது ஜனநாயகத்தை உறுதிப்படுத்தாது நிறைவேற்று ஜனாதிப்பதி முறைமை மற்றும் சீரழிவுமிக்க அரசியல் கலாச்சாரத்திற்கு தொடர்ந்தும் வழிசமைக்கும் உள்ளுராட்சி தேர்தல் சட்டமூலத்திற்கு எதிராக மக்கள் விடுதலை முன்ணனி செயல்படும். அதை தோற்கடிக்கக்கூடிய சகல நடவடிக்கையும் எடுப்போம் என்று வலியுறுத்தினார்

# 13+ என்னும் போர்வையுள் மக்களை ஏமாற்ற வேண்டாம்

ஜே.வி.பி யின் பிரதான செயலானர் தோழர் ரில்வின் சில்வா



தேசிய பிரச்சினைக்கான தீர்வு இந்தியாவை திருப்படுத்துவதாக அமையக்கூடாது. மாறாக தமிழ் மக்களின் குறிப்பாக வடக்கு,கிழக்கு தமிழர்களை திருப்தப்படுத்தும் வகையிலேயே அமைய வேண்டும் என்று ஜே. வி. பி. சுட்டிக்காட்டியுள்ளது. தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு விடை காணாத அரசாங்கம் இந்தியாவை தலையீடு செய்ய வைத்து தீர்வினை திசைதிருப்ப முனைவதுடன் தமிழ் மக்களை சிக்கலுக்குள் தள்ளவும் முயற்சிக்கின்றது தீர்வு தொடர்பில் அரசாங்கம் சிங்கள மக்களுக்கு ஒன்றையும் தமிழ் மக்களுக்கு இன்னொன்றையும் கூறி குழப்பி வருகின்றது.

ஜே. வி. பி. தலைமையகத்தில் நடைப்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் தோழர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி மற்றும் முன்னாள் எம். பி ராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

தோழர் ரில்வின் சில்வா இங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழ் மக்கள் நாட்டில் பாரிய பிரச்சினைகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். இதனை யாரும் மறுக்கமுடியாது. யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்களை எட்டுகின்ற நிலையிலும் கூட அந்த மக்கள் எதிர்க்கொண்டுள்ள உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாதிருக்கின்றது.

தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பேச்சு நடத்தப்படும் அதேநேரம் இந்தியாவின் தலையீட்டினை அதிகரிக்கச் செய்திருப்பதானது குறிப்பாக வடக்கு,கிழக்கு மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து இருக்கும் பிரச்சினைகளை அதிகரிப்பதற்கும் தமிழ் மக்களை மேலும் சிக்களுக்குள் தள்ளிவிடுகின்ற முயற்சிகளாகவே காணப்படுகின்றது. இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடன் இணைந்து ஊடக மாநாட்டினையும் நடத்தியிருந்தார். இதன்படி அரசியலமைப்பின் 13வது திருத்தத்துக்கும் அப்பால் சென்று (13 பிளஸ்)தமிழர் பிரச்சினைக்குத்த தீர்வு காண ஜனாதிபதி தன்னிடம் உறுதியளித்துள்ளதாகக் கூறினார்.

இந்திய அமைச்சர் இவ்வாறு கூறுவதற்கு முடியாது. ஏனெனில் இலங்கை அரசின் நிலைப்பாட்டினை இலங்கை அரசே வெளிப்படுத்த வேண்டும். அதனை கிருஷ்ணா செய்ய முடியாது. அத்துடன் 13 பிளஸ் என்பதன் அர்த்தம் என்ன? இதன் மூலம் எவ்வாறு தீர்வு காணப்படப் போகின்றது? என்பது தொடர்பிலும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

அதேப்போல் தற்போது செனட் சபை என்று கூறப்படுகின்றது. செனட் சபை என்றால் என்ன? இது தீர்வுக்கு எத்தகையதாய் அமைகின்றது? என்பது தொடர்பிலும் தெளிவுப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும். மொத்தத்தில் மூடிமறைத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

மக்களால் விளங்கிக்கொள்ள முடியாதவாறான திட்டங்களை அரசு அறிவித்துக் கொண்டிருக்கினறது. இது எதிர் காலத்தில் பாரதூரமான விளைவுகளையே

10ம் பக்கம் பார்க்க

,ஏஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா ஆகிய என்னால் இல 43/43 வெல்லவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org